(550)
VĀNULAKIL VALLUVAR Part-I
by
CUNTARAM (K) and KATIRAVAN (R

வானுலகில் வள்ளுவர்

(பகுதி I)

[கற்பனை உரையாடல்]

ஆக்கியோர் :

வித்வான்

கவிஞர் கதி. சுந்தரம்

தமிழ் விரிவுரையாளர், தியாகராசர் கல்லூரி,

மதுரை.

வித்வான்

ர. கதிரவன்

தலைமைத் தமிழாசிரியர், ஸ்ரீ விசாலாட்சி உயர்நிலைப்பள்ளி,

ஆ. தெக்கூர்.

CONNEMARA PUBLIC LIBRARY
4 - JUN 1956
MADRAS

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்

மதுரை :: திருநெல்வேலி :: சென்னை

பதிப்புரிமை] 1955 [விலை 14 அணா.

முதற் பதிப்பு—1955

4 - JUN 1956
MADRAS

பாராட்டுரை

[ஆ. தெக்கூர் ஸ்ரீ விசாலாட்சி உயர்நிலைப்பள்ளியின் 6-வது ஆண்டுவிழா, 28-2-53 ஆம் நாள் "கல்கி" ஆசிரியர், திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. 15-3-53 ஆம் நாள் "கல்கி" இதழில் "ரா.கி" அவர்களால் ஆண்டுவிழா நிகழ்ச்சிகள் பற்றி ஒரு கட்டுரை எழுதப்பெற்றது. ஆண்டுவிழாவில் மாணவர் இருவர் "வள்ளுவரும் - கட்டபொம்மனும்" என்னும் உரையாடலை நிகழ்த்தினார்கள். கட்டுரையில் "உரையாடல்" பற்றி ஆசிரியர் குறிப்பிட்டுள்ளதை இங்கே தருகிறோம்.]

ஆ! ஆ! ஆ! தெக்கூர்!

"ரா. கி."

"குறளாசிரியர் திருவள்ளுவரும் வீரபாண்டியக் கட்டபொம்மனும் விஜயம் செய்து என்னுடைய தலைமையில் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். விழா சிறப்பாக நடப்பதற்குக் கேட்பானேன்."

"ஆண்டுவிழாவில் அடுத்த முக்கியமான நிகழ்ச்சி, திருவள்ளுவரும் வீரபாண்டியக் கட்டபொம்மனும் மேடைமீது எழுந்தருளிச் சரமாரியாகச் சொல்மாரி பொழிந்ததுதான்.

பொய்யாமொழிப் புலவரின் அருள்வாக்கான திருக்குறள் எந்தக் காலத்துக்கும் பொருந்தக்கூடிய உண்மைகளைக் கூறும் தமிழ்மறை என்று போற்றுகிறோம். இது எப்படி என்பதை இரண்டு மாணாக்கர்கள் மேடைக்கு வந்து ஒருவர் வள்ளுவராகவும், ஒருவர் கட்டபொம்மனாகவும் பேசி நடித்து மெய்ப்பித்தார்கள். கட்டபொம்மன் தன்

வாழ்க்கை நிகழ்ச்சி ஒவ்வொன்ருகச் சொல்லித் திருவள்ளுவரின் கருத்தைக் கேட்டான். திருவள்ளுவர் அந்த நிகழ்ச்சி ஒவ்வொன்றுக்கும் திருக்குறளில் இருந்து ஆதாரம் எடுத்துக் கூறி, அவனுடைய செயல்களை ஆமோதித்துப் பாராட்டினுர். விஷயம் மிகப் பொருத்தமாகவும் ரஸமாகவும் இருந்தது மட்டுமல்ல- இருவருடைய பேச்சுக்களும் அனலைக் கக்கிக்கொண்டு வரும் அம்புகளைப்போல் வேகமும் உத்வேகமும் பொருந்தி விளங்கின.

தமிழைச் சக்தியுடனும் உத்வேகத்துடனும் கையாளலாம் என்பதற்கு, வள்ளுவரும் - வீரபாண்டியனும் கட்புரிமையோடு இந்த விழாவில் நடத்திய சொற்போர் அத்தாட்சியாக இருந்தது.”

நன்றி

வானுலகில் வள்ளுவர் என்ற இப் புத்தகம் பத்துக் கற்பனை உரையாடல்களைத் தன்னுட்கொண்டுளது.

மாணவர்கள் தங்கள் வரலாற்றைத் தாங்களே கூறுவதற்கும், ஆண்டுவிழாக்களிலே உரையாடலை நிகழ்த்துவதற்கும் திருக்குறளைப் புதிய முறையில் ஆர்வத்தோடு படிப்பதற்கும் இஃது வழிகாட்டும் என்பது உறுதி.

இந்நூல் நல்ல முறையில் வெளிவர உதவி பல புரிந்த அறிஞர் பெருமக்கள் அனைவர்க்கும் எங்கள் பணிவு அன்புள்ள நன்றி.

கதி சுந்தரம்
ந. கதிரவன்

எக்ஸெல்ஸியர் பவர் பிரஸ், மதுரை :—55.

4 - JUN 1956

உள்ளுறை

எண்	பொருள்	பக்கம்
1.	வள்ளுவரும் காந்தியும்	1
2.	வள்ளுவரும் கவிமணியும்	9
3.	வள்ளுவர் திரு. வி. க.	17
4.	வள்ளுவரும் கட்டபொம்மனும்	29
5.	வள்ளுவரும் திலகரும்	38
6.	வள்ளுவரும் பட்டேலும்	47
7.	வள்ளுவரும் பண்டிதமணியும்	55
8.	வள்ளுவரும் பாரதியும்	63
9.	வள்ளுவரும் தாகூரும்	78
10.	வள்ளுவரும் வ. உ. சி. யும்	87

4 - JUN 19
MADRAS

வானுலகில் வள்ளுவர்

1. வள்ளுவரும் காந்தியும்

காந்தி:— கல்விச் சமுத்திரமாய், கற்பனையின் பிறப்பிடமாய், தெள்ளுதமிழ் ஊட்டிவந்த தேவே! அகம் குளிரப் பணிகின்றேன். மண்ணாட்டு ஆசையது விண்ணாட்டில் முடிகிறது.

வள்ளுவர்:— சாந்தத்தின் பிறப்பிடமே! சத்தியத்தின் வாழ்விடமே! காந்திப் பெயர் கொண்ட கலைஞர் பெருமானே! வருக! வருக!! எடுத்த எடுப்பிலேயே 'பணிகின்றேன்' என்று கூறினீர்கள். அந்த வார்த்தையை நினைக்க நினைக்க என் நெஞ்சம் உருகுகிறது. மணிமுடி தரித்த மன்னர்களை எல்லாம் தங்கள் அடிபணியச் செய்தது அந்த ஒப்பற்ற ஒரு வார்த்தை தானே?

காந்தி:— இருட்படல வாழ்வினிலே ஒளிக்கதிரைப் பரப்பிவரும் அருட்பாவாம் திருக்குறளின் அரசே! 'பாலெல்லாம் நற்பசுவின் பாலாக முடியாது. பாரில் உள்ள நூல் எல்லாம் திருக்குறள்போல் ஆக முடியாது' என்ற வேதமொழி என் காதிலே ஒலித்துக் கொண்டேயிருக்கும். தமிழ்மொழியின் தவநூலைத் தமிழ்மொழியிலேயே படிக்க வேண்டும் என்ற விருப்பம் எனக்கு உண்டு. அரசியல் என்னும் சுறாமீனின்

பெருவாயிலே என் வாழ்வு அகப்பட்டு நசுக்கப்பட்டதால் விருப்பம் நிறைவேற வில்லை. திருக்குறளை நேரில் தாங்கள் கூற வேண்டும்.

வள் :—உடல்கொடுத்துத் தனது உயிர்கொடுத்துப் பாரதத்தின் வளம்பெருக்கி இவ்வுலகம் வந்தடைந்த அண்ணலே! அவனியிலே நம்மோடு அளவளாவ இல்லை என்றாலும் அகக்கண்ணால் நும் வாழ்வின் ஆழத்தை உணர்வேன். வாழ்க்கைதனைக் கூறுங்கள்; குறள் வார்த்தைகளைக் கொட்டுகிறேன்.

காந்தி :— மடமைப் பெரும் பிணியை மாநிலத்தில் ஓட்டிவந்த கடமைத் திருவுடையீர்! காட்சிக்கு மிக எளியீர்! 1869-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் இரண்டாம் நாள் போர்பந்தர் என்னும் புனிதக் கிராமத்திலே பிறந்தேன். என்னைப் பெற்றெடுத்த தாயின் பெயர் புத்திலிபாய்; பளிங்கு நெஞ்சம் படைத்தவர். அன்னையைப் பார்க்கும் பொழுதே தெய்வபக்தி எனக்கு வளரும். உடலைப் பசி வாட்டினாலும் சரி, உயிரே போவதானாலும் சரி; ஏற்றுக் கொண்ட விரதத்தை இனிது நிறைவேற்றியே தீர வேண்டும் என்ற உறுதியுள்ளம் படைத்தவர். என் தந்தை போர்பந்தர் ஜமீனிலே புகழ்பெற்ற திவானாக இருந்த கபாகாந்தி ஆவார். கீதையின் சுலோகங்களை ஓதித்தான் உணவருந்தச் செல்வார். 'மோகனதாஸ்! உன்னை நான் பணக்காரனாக ஆக்க விரும்பவில்லை. பவிசுக்காரனாகவும் ஆக்க விரும்பவில்லை. படிப்பாளியாக ஆக்கவே விரும்புகிறேன்' என்று கூறிக் கல்வியைப் புகட்டி அறிவுடையவனாகச் செய்தார்.

வள் :— தந்தை திருவுளத்தைத் தயங்காமல் கூறி வந்த சிந்தைத் தெளிவுடையீர்! செப்புகிறேன் குறள் அதனை.

> **தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து**
> **முந்தி யிருப்பச் செயல்.**

காந்தி:— குறள்கூறி உள்ளம் குளிர்வித்த பெரியீர்! இளமை தொட்டே என் வாழ்வில் இரண்டறக் கலந்தார்கள் இரண்டு பெரியார்கள். ஊன் உடலால் அல்ல; உள் ஒளிரும் ஞானத் திருவுடலால். உயிரோட்டம் உள்ள அந்த உத்தமர்களின் வாழ்வு என் வாழ்வைப் புனிதம் ஆக்கியது. அவருள் ஒருவன் அரிச்சந்திரன். அரிச்சந்திர நாடகத்தைப் பார்த்தேன். இல்லை இல்லை. வாழ்க்கையிலே புது மணத்தை உண்டாக்கிய பூங்காவைக் கண்டேன். தன் இலட்சியத்திற்காக நாடு துறந்து காடு புகுந்தான்; கண்கலங்கவில்லை. மனைவியை விற்ருன்; மைந்தனை விற்ருன்; மனம் பதறவில்லை. ஏன்? தன்னையும் அடிமையாக விற்றுக் கொண்டான், தளரவில்லை. அவன் சத்தியத்திற்காகத் தன் வாழ்வை முற்றும் துறந்தான். மற்ருெருவன் பிரகலாதன். ஆம்; கொடுமைக்காரனது வீட்டிலே பிறந்து சிறுவயதிலேயே பெருந்துன்பங்களை எல்லாம் அனுபவித்து ஊக்கத்தால் வெற்றி கொண்ட உத்தமன். இவர்கள் வாழ்வு என் வாழ்வை மலரச் செய்தது.

வள்:— உண்மை அறநெறியின் உத்தமரைப் போற்றிவரும் அன்பரே! அரிச்சந்திரன் உயர்ந்ததை எண்ணினுன். உயிருக்கு அழிவு வந்த போதும்

அவன் உள்ளம் உடைய வில்லை. இதோ அவன் வாழ்விற்கு ஓர் குறள்:

எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.

பிரகலாதன் உருவத்தால் சிறியவன்; உள்ளத்தால் பெரியவன் என்கிறீர்கள்.

உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்
கச்சாணி அன்னார் உடைத்து.

இந்த இருவரும் இதயத்திலே புகுந்து வாழ்வைத் தூய்மையாக்கினார்கள். இவர்களை வழிகாட்டும் தலைவர்களாக இளமையிலேயே பெற்ற நானே பேறு பெற்றவன் என்கிறீர்கள்.

அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கோளல்.

காந்தி:— பேராற்றல் மிக்க பெரியீர்! நான் பெற்ற இரண்டு கண்களும் மகத்தானவை. ஒரு கண் அஹிம்சை. மற்றொரு கண் உண்மை. இந்த இரண்டு கண்களும் என் வாழ்வைப் பிரகாசம் அடையச் செய்தன.

வள்:— நெஞ்சத்து உள்ளொளியை நீள்நிலத்தில் காட்டிவந்த செம்மைத் தவம் உடையீர்! வஞ்ச உலகினிலே வாழ்கின்ற கூட்டத்தார் தன்னுயிர்போல் மன்உயிர்களை நினைக்காமல் கொல்லும் மடமை கொடிது! கொடிது!! கொல்லா விரதம் மேற்கொண்டு குவலயத்தார் வாழவேண்டும். எந்த உயிருக்கும் எள்ளளவும் துன்பம் உண்டாக்காமல் கூறப்படும் சொல்லே உண்மைச் சொல் எனப்படும்.

இவற்றை உலகத்தில் பரப்பிய உங்கள் செயல் பாராட்டுதற் குரியது.

ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.

காந்தி :— ஞானமிகும் நல்லீர்! மோகனதாஸ் காந்தியாக இருந்த நான், பட்டம் பெற்றேன்; பாரிஸ்டர் காந்தியானேன்; பயணம் ஆனேன் பாரதத்தை விட்டுத் தென்னுப்பிரிக்காவுக்கு; டர்பன் துறைமுகத்திலே வரவேற்புக் கிடைத்தது. நீதிமன் றத்திலே என் உருவத்தைக் கண்டதும் 'தலைப் பாகையை எடுத்துவிடு' என உத்தரவிட்டது அர சாங்கம். அஞ்சவில்லை நான். வேதனைக் குரலோடு வெளியேறினேன். அந்த நாட்டிலே கொடுமைக் காரரின் கையிலே அகப்பட்டுக் குற்றுயிராய்க் கிடக்கும் என் அருமை இந்திய மக்கள் அடையும் அல்லல்கள் கணக்கில் அடங்கா. கண் கலங்கினேன். கயவர்களின் கண்களைத் திறந்துவிடு எனக் கடவு ளிடம் பிரார்த்தித்தேன். தென்னுப்பிரிக்காவில் நடை பெற்ற சம்பவங்கள் என்னைச் சிறந்தொரு தொண் டனாக மாற்றின. என்னுடன் சேர்ந்துழைத்த தமிழர்களையும் வள்ளியம்மை என்னும் 16 வயதுத் தமிழ்ப் பெண்ணையும் என்னால் மறக்கவே முடியாது.

வள் :— உழைத்துப் பெருமை பெற்ற உத்தமரே! பாரினில் மக்கள் பண்பினாலே சிறந்து விளங்க வேண்டும் என எண்ணிப் பல்லாயிரக் கணக்கான மக்களின் வாழ்வைத் திருத்துவதற்காக முனைந்தீர்கள். எண்ணத்தை மாற்ற இடை இடையே துன்ப நிகழ்ச்

சிகள் பல உங்கள் வாழ்விலே தோன்றின. துன்பத்தைப் பொருட்படுத்தாமல் உண்மைக்குப் போராடினீர்கள். புகழ் பெற்றீர்கள். நெருப்பிலே காட்டி வாட்டவாட்டப் பொன் பிரகாசம் அடைகிறது. அதைப் போலத் துன்பம் வரவரப் பொறுமை காட்டிப் புன் முறுவல் கொண்டீர்கள். பெருமை பெற்றீர்கள்.

> சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
> சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.

காந்தி:— வாழ்வதற்கு நெறிகாட்டும் வள்ளலே! சபர்மதி யோகியாக விளங்கினேன். நாட்டிலே என் கொள்கைகளுக்கு நல்லதொரு வரவேற்புக் கிடைத்தது. என் அஹிம்சையைக் கண்டு சிரிக்க வந்த பட்டேல் சீடரானார். இரும்பு நெஞ்சம் படைத்த படேலை என் அஹிம்சை இழுத்தது என்றால் அதன் காந்த சக்தியை என்னென்பேன். 1914-ஆம் ஆண்டிலே தொடங்கிய உலகப் பெரும் போரிலே இந்திய மக்கள் ஆங்கிலேயர்களுக்குப் பேருதவி புரிந்தார்கள். போர் முடிந்ததும் 'அடிமை நிலை மாறி உரிமை நிலை வரும்' என எதிர்பார்த்தார்கள். வரவில்லை. எங்கும் கிளர்ச்சி! புரட்சி! எழுச்சி! அறப் புரட்சி செய்ய ஆட்கள் திரண்டார்கள். ஜாலியன் வாலா பாக் தோட்டத்திலே ஆண்களையும் பெண்களையும் பீரங்கியின் வாயில் வைத்துப் பிளந்தார்கள் ஆட்சி செய்த அரக்கர்கள். இத் தீய நிகழ்ச்சி மக்களின் தேசப் பற்றை மிகமிக வளர்த்தது.

வள்:— மானிடக் கூட்டத்தை மலர்ந்ததொரு முகத்தாலே தானடக்கி நல்வாழ்வு கொடுத்த பெரியீர்!

உங்களால் போடப்பட்ட உரிமைவிதை பல தலைவர்களின் முயற்சி என்னும் உரத்தோடு, அன்பு என்னும் நீர்பெற்று, கொடுமைக் களை இன்றி, செல்வச் செழுமையுடன் வளர்ந்து சுதந்திரம் என்னும் செந்நெற் கதிரை இந்திய மக்களுக்கு 1947 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 15 ஆம் நாள் கொடுத்தது. இத் தகைய செயற்கரிய செயலை எல்லா மக்களும் செய்ய முடியாது.

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

காந்தி :— தெளிவான மொழியாலே சிந்தை மகிழ்ந்திடுவீர்! உடலால் இளைத்தவன் நான். ஊதினால் பறப்பேன். பெரியார் எனக் கூறும் சொல்லுக்கு உரியவனோ நான்.

வள் :— மலை அனையீர்! உள்ளம் மலைக்காதீர்! மலை பெரிது. எங்கிருந்து பார்த்தாலும் எழிற் காட்சி மிகத் தரும். யானை கட்டி இழுத்தாலும் அதை அசைக்க முடியாது. அதுபோல, உங்கள் உடல் எளிதாக இருக்கலாம்; உள்ளம் பெரிது. பால் புளித்தாலும் பகல் இருட்டானாலும் நிலை குலைய மாட்டீர்கள். அடக்கத்தை மேற்கொண்டு அவனியை ஆளும் சக்தியை வெளியிடும் உடல் உங்கள் உடல். உங்கள் அஹிம்சை எண்ணத்தை எவரேனும் அசைக்க முயன்றதுண்டா? முடிந்ததா?

நிலையில் திரியா தடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

காந்தி :— அண்ணலே! உரிமை இந்தியாவில் வாழ்ந்தேன். கனவை நனவாக்கத் திட்டம் பல தீட்டினேன். தீட்டிய திட்டம் செயலுக்கு வருமுன் திடீரென ஒரு நாள் பிரார்த்தனைக் கூட்டத்தில் தாக்கப்பட்டேன். என் வாழ்வு முடிந்தது.

வள் :— கண் கலங்குகிறேன். 1948-ஜனவரி 30 ஆம் நாள் உலக மெங்கும் எழுப்பப்பட்ட குரல் இதுதான்: "காந்தி மறைந்தார். சாந்தி நிலவுக." வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தீர்கள். தெய்வம் எனப் போற்றப் பட்டீர்கள்.

> வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
> தெய்வத்துள் வைக்கப் படும்.

காந்தி :— தெய்வக் குறள் கூறி சிந்தை மகிழ்வித்த வையப் புகழ்பெற்ற வள்ளுவரே! நன்றி. விடை தரல்வேண்டும்; வணக்கம்.

வள் :— என் மனத்தில் உமது உருவம் மறையவில்லை. வணக்கம்.

2. வள்ளுவரும் கவிமணியும்

கவிமணி :— சென்ற காலத்தின் பழுதிலாத் திறத்தையும், வருங்காலச் சிறப்பையும் நன்கறிந்த நாவலரே! வணங்குகின்றேன். தங்களிடத்து அழைத்து வரக் காலதேவன் என்னைப் பலமுறை ஏமாற்றினன்; இறுதியாக நோய் எனும் போர்வையிலே என் நொந்த உடலில் இருந்து உயிரைப் பிரித்து விட்டான். உடல் நோய் தீர்வதற்கு எத்தனையோ மருந்துகளை உண்டேன். அந்த மருந்துகளினுல் என் உடல் நோய் மாள்வதும் மீள்வதுமாக இருந்தது. ஆனுல் என் உயிர் நோய்க்கு மருந்து கிட்டவில்லையே யெனத் தேடினேன். தங்களின் திருக்குறள் அதற்குச் சிறந்த மருந்தாயிற்று. அம்மருந்து கண்ட தங்கள் மூலமாகவே குறள் கேட்க விழைகின்றேன்.

வள்ளுவர் :— ஆன்ற தமிழ்ப் புலவீர்! தங்களின் அரிய உரையினைக் கேட்டு அகமகிழ்கின்றேன். பொன்போலும் நும் வாழ்வைப் புகன்றிடுவீர். என் குறளை நன்ருய் எடுத்தே இயம்பிடுவேன்.

கவி :— சீரிளமைத் திறன் வாய்ந்த செந்தமிழ்க்குத் திருக்குறளாம் பேரிலக்கியம் தந்த பெருமானே! நான் நாஞ்சில் நாட்டுத் தேரூரிலே கி. பி. 1876-ஆம் ஆண்டு பிறந்தேன். என் தந்தையின் பெயர் சிவதாணுப் பிள்ளை. தாயின் பெயர் ஆதிலட்சுமி அம்மையார். வாழையடி வாழையாகவே எங்கள் குடும்பத்தில் தமிழ் வாழ்ந்தது; கவிதை தழைத்தது; இளமைப் பருவத்திலே எனக்கு வளம் தந்தவை தமிழும் சைவமும். தமிழ்

மீது நான் கொண்ட பற்று தெய்வீகப்பற்று. எனக்குச் சிவமாகிச் சித்தத்துள் தித்தித்தது இத் தெய்வத் தமிழ். இளமையிலேயே நினைவாற்றலையும் கேட்டதை உடனே திருப்பிச் சொல்லும் பண்பையும் பெற்றிருந்தேன். இளமையில் ஒரு நாள் சாந்தலிங்க சுவாமிகள் கூறிய தேவாரப்பாடலை ஒரு முறை கேட்டேன். நான் முன்னர் அறியாத இந்தப் பாடலை ஒரே முறை யிற்கேட்டு அடுத்த கணமே அதை ஒப்பித்தேன். அடிகளாரால் பாராட்டப் பெற்றேன். அந்தப் பருவத்தில் சுசீந்தைமாலை, அழகம்மை விருத்தம் முதலிய நூல்கள் என்னால் பாடப்பட்டன.

வள் :— சின்னக் குழந்தைகட்குச் சிங்காரப் பாட்டிசைக்கும் வள்ளலே! தங்கள் உரை கேட்டு மகிழ்ந்தேன். புவிச்செல்வம் அனைத்திலும் சிறந்தது செவிச் செல்வம். ஒருவருக்கு மாடமாளிகைகள் இருக்கலாம். ஆளடிமை செய்ய ஆட்கள் இருக்கலாம். பொன்மலை போல் குவிந்த நிதியம் இருக்கலாம். இத்தனையும் இருந்தும் அவனிடத்துச் செவிச்செல்வம் இல்லை என்றால் அவன் பெற்ற பொருள்களால் பயனில்லை. தங்களிடத்தில் அந்தப் பெருஞ் செல்வம் நிறைந்திருந்தது. சாந்தலிங்க சுவாமிகள் கூறியதைக் கேட்டீர்கள். உடனே, மறுமுறை ஒப்பித்தீர்கள். இந்தச் செவிச் செல்வம் அனைவருக்கும் வாய்ப்பதரிது.

> **செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்**
> **செல்வத்துள் எல்லாம் தலை.**

கவி :— மாயா உலகத்தின் மருள்நீங்க ஞான மறை தந்த நல்வேந்தே! வாழ்வுப் பாதையில் இடர் பல

நேரினும் தடை பல வரினும் கல்வியைக் கற்றுத் தெளிய வேண்டும் என்ற கருத்தினைக் கொண்டு ஆரம்பப்படிப்பைத் தேரூர் தொடக்கப் பள்ளியில் தொடங்கினேன். நான் பிறந்த நாட்டுப் படிப்பாக மலையாளத்தையும், அரசியல் படிப்பாக ஆங்கிலத்தையும், தாய்மொழிப்படிப்பாகத் தமிழையும் கற்றேன். ஆரம்பப் படிப்பை முடித்தவுடன் கோட்டாறு சென்று உயர்நிலைப்பள்ளிப் படிப்பைத் தொடங்கினேன். என் மாணவப் பருவத்திலேயே பொங்கிவரும் புனலென, புனிதமய நிலவெனக் கவிதைகளைச் சொரிந்தேன். கல்வெட்டு ஆராய்ச்சியில் கருத்தைச் செலுத்திப் பயிற்சி நிறைந்தேன். கல்வி பள்ளியோடு நின்றுவிட்டதெனச் சிலர் கருதுவர். 'சாந்துணையும் கல்லாதவாறு என்' என்று என் இறுதிவரையும் கற்றேன். புதியனவற்றை நாள்தோறும் கற்றுத் தெளிந்தேன். சிலர் ஒழுக்க நெறிகளைத் தவறாது கற்பர். ஆனால் கற்ற தன்படி நடக்கமாட்டார்கள். அறநெறியைப் பற்றி ஆயிரம் ஆயிரம் கூறுவர். ஆனால் சொந்த வாழ்வில் அறத்திற்கே இடமில்லாதபடி நடந்து கொள்வர். எத்தனையோ இனிய நூல்கள் இருந்தும் இன்னாத நூல்களைக் கற்றுப் பொழுது போக்கிப் புறக்கணிப்பர் இன்னும் சிலர். நானோ சிறந்தவற்றை முதலில் தெரிந்தெடுத்தேன்; தெரிந்தெடுத்த அதனைக் குறை நீங்கக் கற்றேன். கற்றபடி நடந்தேன். 'எழுமையும் கல்வி பயன்தரும்' என்ற எண்ணம் உடையேன்.

வள் :— ஒழுக்கமெனும் உயர் குணத்தால் விழுப்பம் அடைந்த உரவோய்! தங்கள் திறம்கண்டு

மகிழ்கின்றேன். உயிர்களுக்கு 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' எனக் கற்றீர்கள். தங்கள் எண்ணம் உயர்ந்தது.

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்
கெழுமையும் ஏமாப் புடைத்து.

கவிமணி:— குறள் தந்த குரிசிலே! என் தந்தையின் பிரிவுக்குப் பிறகு குடும்பம் முழுவதையும் காக்க வேண்டிய பொறுப்பு என்னைச் சார்ந்தது. படித்த கல்வியைக் கொண்டு அறத் தொழில் ஒன்றுபுரிந்து ஊதியம் தேட எண்ணினேன். ஆசிரியத் தொழிலே சிறந்ததென எண்ணி 1901-இல் கோட்டாற்று நடுநிலைப் பள்ளியில் ஆசிரியன் ஆனேன். கடமை உணர்ச்சியோடும், தமிழ்மீது கொண்ட காதல் உணர்ச்சியோடும் மாணவர்களுக்குப் பாடம் சொன்னேன். சின்னம் சிறு உள்ளங்கள் விருப்படையும் வண்ணம் இயற்கைப் பொருள் அனைத்தையும் அழைத்து அவர்கள் முன் காட்டுவேன். நிலவை அழைத்துக் கவிதை கூறி, சிறுவர்களை அவ்வொளியில் விளையாட விடுவேன். கவிதை மொழியிலே, எளிய நடையிலே, கிளியையும், குயிலையும், மயிலையும் அவர்களோடு பேசவைப்பேன்; அவர்கள் உள்ளத்திலே பொங்கி எழும் மகிழ்ச்சியைக் கண்டு நான் உள்ளம் மகிழ்வேன். பின்பு ஆசிரியர் பயிற்சிப் பள்ளியிலும், திருவனந்தைப் பெண்கள் கல்லூரியிலும் பணியாற்றினேன். நான் ஓய்வு பெறும்வரை பெண்கள் கல்லூரியிலேதான் பணியாற்றினேன். தமிழாசிரியரையே இழிவாகக் கருதிய அந்த நாளிலேயே என் தமிழ்த் தென்றல் உரையால் மாணவிகள் அனைவரும்

மது உண்ட வண்டென மனமகிழ்ந்து நின்றனர். சொல்மாரி பொழிந்தேன். அயராது, சோராது தமிழ் மாரி பொழிந்தேன். சென்ற சென்ற இடந்தோறும் வென்றியே புனைந்தேன்.

வள் :— கடமைப் பணிபுரிந்து மடமைதனை ஓட்டிய மாமணியே! கணக்கற்ற செய்திகளைக் கற்றுத் தெளிந்து வைத்திருப்பார்கள். ஆனால், தான் தெரிந்து வைத்திருப்பதைப் பிறர்க்கு எடுத்துச் சொல்லும் வன்மை இழந்திருப்பார்கள். மற்றும் சிலர் பிறர்க்கு எடுத்துச் சொல்லும் ஆற்றல் பெற்றிருப்பார்கள். ஆனால், செய்தி ஒன்றும் தெரிந்து வைத்திருக்க மாட்டார்கள். இவ்விரண்டிலும் பயன் இல்லை. தாங்களோ கற்றுத் தெளிந்தீர்கள். தெளிந்தவற்றைப் பிறர்க்கு எடுத்துச் சொல்லும் சொல்வன்மை பெற்றீர்கள். வாகைசூடினீர்கள்.

சோலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது.

கவிமணி : செல்வக் குறள் தந்த வள்ளுவரே! இலக்கியம் நாட்டின் வாழ்வையும், வளத்தையும் காட்டும் காலக்கண்ணாடி என்பதனை அறிந்தேன். மக்கள் உள்ளத்தையும் உணர்வையும் திருத்துவதும் வளர்ப்பதும் அவ்விலக்கியந்தான் என்பதனை அறிந்தேன். செந்தமிழின் இலக்கியத்தை வளர்க்க எண்ணம் கொண்டேன். ஆசிய ஜோதி, மலரும் மாலையும், பாரசீகக் கவியமுதம், மருமக்கள் வழி மான்மியம், சுசீந்தை மாலை, அழகம்மை ஆசிரிய விருத்தம், காதல் பிறந்த கதை, தேவியின் கீர்த்தனங்கள் முதலிய நூல்களை

எழுதினேன். மாணவரும், பெரியவரும் என் நூலின் அருமை பெருமை யறிந்து பாராட்டினர். இவ்வாறு என் வாழ்நாள் வானிலே எண்ணற்ற இலக்கிய மீன்கள் பூத்தன.

வள்:— அருந்தொண்டு புரிந்த அறிஞரே! மண்ணில் மனிதராய்ப் பிறந்து, புற்றீசல் போல் மடியும் கோடானுகோடி மக்களை நாம் காணுகிறோம். மன்னு உலகத்தில் மன்னிய புகழ் பெற்றவர் சிலர். வீரத்தால், கொடையால், அறிவால், பொருளால் அவர்கள் தம் புகழை இவ்வுலகில் நிலைநிறுத்திச் சென்று இருக்கிறார்கள். வீரம் படைத்தோன் ஒருவன் அந்த வீரத்தைத் தக்க வழியால் வினைக்கண் படுத்தாது இருப்பானேல் அவன் புகழ் பெற முடியாது. அவ்வாறேதான் அறிவும், அதனைத் தொழிற் படுத்துவான் கண்ணே சிறந்து விளங்கும். தங்கள் இடத்திருந்த அறிவினைத் தக்கவாறு வினைப்படுத்தினீர்கள். வினைத் திட்பம் உடையாரைத்தான் உலகம் வரவேற்கிறது.

எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டா துலகு.

என்ற என் குறள் அறிந்து உலகம் உவப்ப நடந்து கொண்டீர்கள்.

கவிமணி:— மலராகி மணமாகி வாழ்வை மகிழ்விக்கும் குறள் தந்த பெரியீர்! பழுமரத்தை அடையும் பறவைக் கூட்டங்களைப்போல என் அறிவு ஒளியைக் கண்ட நாட்டுப் பாவலரும் நாவலரும் பணம் படைத்தோரும் என்னை அணுகுவாராயினர். நான் எழுதிய பாடல்களுக்கு மதிப்புரை தீட்டினோர் பலர்.

இராஜாஜி, ஆர். கே. ஷண்முகம் செட்டியார் முதலியோர் என்மீது கொண்ட அன்பிற்கு அளவேயில்லை. 1940-ஆம் ஆண்டு சென்னைத் தமிழ்ச் சங்கத்தின் 7-வது ஆண்டு விழாவில் ராஜாசர் அண்ணாமலைச் செட்டியார் தலைமையில் எனக்குக் கவிமணி என்ற பட்டம் வழங்கப்பட்டது. செட்டி நாட்டைச் சேர்ந்த ஆத்தங்குடியில் ராஜாசர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் எனக்குப் பொன்னாடை போர்த்தி வெள்ளிப் பாத்திரங்களை அன்பளிப்பாகத் தந்தார்கள். நான் அவற்றை என் அன்னையின் பெயரால் ஆதிலெட்சுமி அம்மையார் தமிழ்ப்பரிசு என்று ஏற்படுத்தித் திருவாங்கூர்ப் பல்கலைக் கழகத்தோடு இணைத்தேன். சென்னை, அண்ணாமலை, திருவிதாங்கூர் முதலிய பல்கலைக் கழகங்கள் தமிழ்த்துறைக்காக என் உதவியை நாடின. அவை தமக்கு தக்கவாறு உதவினேன். என் புகழ் படிப்படியாக மேலும் மேலும் வளர்ந்தது.

வள் :— புகழறம் பேணிய புலவ! பிறந்து வளர்ந்து வாழ்ந்து மடியும் காலத்து மனிதன் இம்மண்ணகத்தே வைத்துச் செல்வது ஒன்று உண்டு. அதுதான் புகழ். அந்தப் புகழைத் தாங்கள் பெற்றீர்கள்.

ஒன்றா உலகத் துயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன் றில்.

கவிமணி :— வாய்மைக் குறள் தந்த வள்ளுவரே! என்னிடத்து இளமை தொட்டே அடக்கமும் பணிவும் இயற்கையாகவே அமைந்தன. நண்பரிடத்து நான் பெரிதும் பற்று வைத்திருந்தேன். நன்றி

மறவா மனப்பான்மை நான்பெற்ற செல்வங்களுள் ஒன்று. செட்டிநாட்டுக்காரர் எனக்குப் பொன்னுடை போர்த்திப் புகழ்மொழி தந்த காலத்திலும் அது குறித்துச் செருக்கோ, தருக்கோ கொள்ளாது "ஆனைக்குப் போர்த்த வேண்டிய பொன்னுடையை ஆட்டுக்கு அணிவித்தீர்கள்" என அடக்கமாகப் புகன்றேன். கடுஞ் சொல்லை என் வாயிதழ்கள் கண்டது கிடையாது. பணிவோடு வாழ்ந்தேன். இன் சொல் கூறி மக்களை இன்பத்தில் ஆழ்த்தினேன்.

வள்:— அணி பெற்ற அறிஞரே! தங்கள்பால் அமைந்த பண்பை விளக்கும் குறட்பா இதோ:

> பணிவுடையன் இன்சொல னாதல் ஒருவற்
> கணியல்ல மற்றுப் பிற.

கவிமணி:— எப்பாலவர்க்கும் இயைய முப்பால் மொழிந்த முனிவரே! குறள் உரை கூறிய தங்கட்கு என் நன்றி தோய்ந்த வணக்கம்.

வள்:— வணக்கம்.

3. வள்ளுவர் — திரு. வி. க.

வள் :— வையத்தை ஒளியாக்கி வானத்தை மண மாக்க வரும பெருமானே, வருக! வருக!! விண்ணுலகை நோக்கி என்னைத்தான் காண வருவீர்கள் என எதிர் பார்த்திருந்தேன். வரவு கண்டு மகிழுகின்றேன்.

திரு. வி. க. :— தொல்லுலக வாழ்வின் அல்லலிலே நான் சிக்கிய பொழுதெல்லாம் தோன்றாத் துணையாகி எனைக் காத்த தெய்வமே! அமைதிப் பெருநிலவே! அறிவுத் திருவிளக்கே! தொழுகின்றேன். பார்த்தா லும், நினைத்தாலும், படித்தாலும், படிக்கப் பக்கம் நின்று கேட்டாலும் தித்திக்கும் தீஞ்சுவைக் குற ளைத் தங்கள் திருவாயாலே கேட்டுத் திளைக்க வேண்டு மென எண்ணினேன். தாங்கள் இருக்கும் திசை நோக்கி விரைந்தேன்.

வள் :— குறையாத குணக்குன்றே! மறையாத மணி ஒளியே! தங்கள் மனம் கண்டு மகிழ்ந்தேன். தங் கள் வாழ்வும் குறளும் இரண்டறக் கலந்த வகையறிந்து பூரிக்கின்றேன். சொந்த வாழ்வைக் கூறுக, சொல்லிடு வேன் குறள் அதனை.

திரு. வி. க. :— குறள் தந்த கோமகனே! என் முந்தையர் வாழ்ந்த பழம்பதி தமிழ் தழைக்கும் திருவா ரூர். பின் என் தந்தை தாயர் வாழ்ந்தது சென்னைமா நகர். வாணிகம் செய்துவந்த என் தந்தையார் சென் னையை அடுத்த துள்ளம் என்னும் சிற்றூருக்குச் சென்று வசித்தார். அங்கேதான் நான் 1883-ம் ஆண்டு தோன்றி வளர்ந்து வந்தேன். என் தந்தை

பெயர் விருத்தாசல முதலியார். தாயார் பெயர் சின்னம்மையார். நிமிர்ந்த நன்னடை, நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நற்சேவை, திமிர்ந்த ஞானச் செருக்கு அனைத்தும் என்னைச் சேர்ந்தன. புறங்கூறி அறியேன்; பொய்பேசி அறியேன்; பள்ளிப் பருவத்தை இங்ஙனம் கழித்தேன். ஊதியத்திற்காக உழைப்பை மேற்கொள்ளத் தூண்டினர் என் உறவினர். ஆங்கிலேயன் அலுவலகத்தில் நானும் ஒரு பணியாளன் என்ற முறையில் புகுந்தேன்.

அப்பொழுதுதான் உரிமைக்கு வித்திட்ட திலகரின் உயிர் முழக்கங்கள் உலவி வந்தன. செய்தித்தாள்களில் அவற்றைக் கண்ட நான் அவைகளை என் உடனுறை நண்பர்களுக்கு எடுத்துரைத்தேன். அவர்கள் அடிமை உள்ளத்தை உரிமை உள்ளம் ஆக்கினேன். ஆங்கிலேயன் 'தகாது' எனத் தடை விதித்தான். உரிமை இல்லா இடத்தில் வாழ்வது தகாது என வெளியேறினேன். பின்னர் பெரிய புராணத்திற்குக் குறிப்புரை ஒன்று எழுதினேன். 1909-ம் ஆண்டு ஆயிரம் விளக்கு வெஸ்லியன் மிஷன் என்ற பாடசாலையில் ஆசிரியனாக அமர்ந்தேன். அப்பள்ளியின் தலைவராய் இருந்த திரு. ஜான் இரத்தினம் அவர்கள் என் வாழ்வில் ஒளி ஊட்டிய பெரியார். அவரோடு மட்டுமின்றி, பாம்பன் குமரகுருதாசர், டி. சதாசிவ ஐயர், பெசண்ட் அம்மையார் முதலியோரிடத்தில் பழகி நான் கற்றவை கணக்கில் அடங்கா. அந்தப் பெரியவர்களோடு என் வாழ்வின் முதற்கட்டம் முடிவடைகிறது.

வள் :— அன்புப் பெரியீர்! அகம் குளிர்ந்தேன்; தங்கள் வாழ்வில் ஒளியைக் காணுகிறேன். உணர்

வைக் காணுகிறேன். பொய்கூறாத தங்கள் மெய்யறிவைக் கண்டு வியக்கின்றேன். புறங்கூறாத தங்கள் அறவாழ்வை அறிந்து மகிழ்கின்றேன். புறங்கூறி வாழ்வதை விடச் சாதலே மேன்மை தரும்.

புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்
அறங்கூறும் ஆக்கம் தரும்.

பல பெரியோரிடத்தில் பழகினீர்கள். நலம் பெற்றீர்கள்.

அறனறிந்து மூத்த அறிவுடையோர் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்

என்ற குறள் நெறியை வாழ்க்கையில் ஏற்றுக் கொண்டீர்கள். மாண்பு பெற்றீர்கள்.

திரு. வி. க:— இருள் நீக்கி எனையாளும் எழில் வேந்தே! வெஸ்லியன் மிஷன் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியனாக இருந்த சமயம் என் மனதுக்கினிய மங்கை ஒருத்தியை மணம் புரிந்து கொண்டேன். புகழ் புரிந்து இல்லறம் நடத்தினேன். என் வாழ்வில் உறுதுணையான அந் நங்கை என் உடலோடு கலந்து, உயிரோடு ஒன்றி, உணர்விலே நின்றாள். எனை ஆட்கொள்ள வந்த பெண் தெய்வமாகவே என் கட்புலன்களுக்கு அவள் காட்சி அளித்தாள். விருந்தினரைக் கண்டவுடன் அரும்பும் புன்னகையால் அவர்களை வரவேற்று அன்பு உரை கூறி அமுது படைப்பாள். எனக்குப் பண்பிலே மனைவியாய், அன்பிலே தாயாய், அறிவுரை தருவதிலே ஆசிரியராய், இடர் நீக்கி இன்பம் தருவதிலே இறையாய் அவள் காட்சி தந்தாள். பெண்மையிலே

தெய்வீகத்தைக் கண்டேன்; தாய்மையைக் கண்டேன்; காதலைக் கண்டேன்; பெண்மை வாழ்க எனக் கூத்திட்டேன். அப் பெருமாட்டியுடன் நான் வாழ்ந்த காலத்தை என் வாழ்வின் பொற்காலமாகக் கருதுகிறேன். வாழ்வின் எச்சமாக இரு குழந்தைகள் தோன்றினர். அவர்தம் இன்னமுத மழலையிலே எழில் பெருகும் குதலையிலே என் உள்ளத்தைக் குதித்தோடவிட்டேன். அந் நங்கையின் அன்பிலே என்னை மறந்தேன். அவர்களோடு நான் வாழ்ந்த ஆண்டுகள் எனக்கு நாட்களாகத் தோன்றின. ஆனால்... அந்தோ! எந்த இயற்கையை நான் பரவி வந்தேனோ அதே இயற்கை அவர்களை ஆட்கொண்டு என்னை 1918-ஆம் ஆண்டுக்குள் தனியனாக்கி விட்டது. மறுமணம் புரிந்து கொள்ள வேண்டுமென என் உறவினர் மன்றாடினர். என் மனம் மறுத்தது. அவர்களிடத்தில் நான் கொண்ட காதல் இறவாக் காதல்; மாசுமறுவற்ற தூய காதல். கற்புக் கடம் பூண்ட காரிகையரின் உள்ளத்தில் காதலன் ஒருவனைத் தவிர மற்றையோர்களுக் காதல் போர்வையிலே இடமில்லை. அதேபோல்தான் ஒவ்வொரு கணவனுக்கும். என் பெருமாட்டி என்னை விட்டுப் பிரிந்தாள்; என் பிள்ளைகள் என்னைத் தவிக்க விட்டுச் சென்றனர். ஆனால், அவர்கள் உருவமும் உரையும் என் உள்ளத்திலே இன்பம் பொங்கக் காணுகின்றேன். அவர்களைப் பிரிந்த துயர் என்னை வருத்துவதையும் உணர்கின்றேன். இதுவே என் வாழ்வின் இரண்டாவது பகுதி.

வள் :— வாழும் முறையோடு வாழ்ந்த பெருந்தகையீர்! தங்கள் வாழ்க்கைத்துணை நலத்தின் வளங்கண்டு

உளம் மகிழ்ந்தேன். தங்கள் இல்லக்கிழத்தியாளர் மனைமாட்சி அமையப் பெற்றிருந்தார்கள். அறவோர்க் களித்தல், அந்தணர் ஓம்பல், துறவோர்க் கெதிர்தல், தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடல் முதலிய பண்புகள் இயற்கையாகவே அவர்கட்கு அமைந்திருந் தன. கொண்ட கணவனைக் காத்தார்கள். வருவாய்க்குத் தக்க செலவு செய்து வாழ்வை வளமாக்கினார்கள். அத்தகையோர்களே வாழ்வுக்குத் துணையாய் இருப்பவர்கள்.

மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

அஞ்சாத நெஞ்சுடையீர்! இறப்பு எல்லோருக்கும் வருவது. 'நேற்றிருந்தோர் இன்றில்லை' என்ற பெருமையை யுடையதுதான் இவ் வையகம்.

திரு. வி. க :—இன்பக் குறள் கூறி என்னைக் குளிர் வித்த அன்புப் பெரியீர்! என்னைச் சூழ்ந்து நின்ற இல்லறக் கட்டுகள் அறுபட்டபின் நான் பிறந்த வையத்தை நோக்கினேன். முல்லைக் காடு கமழும் முத் தமிழ் மணக்கும் தமிழ் மாநிலத்தை நோக்கினேன். தொலையாத சாதி, மத, சாத்திரப் போரிலே சிக்கி நான் பிறந்த தாயகம் நிலைகுலைந்து தடுமாறுவதை எண்ணிக் கண்ணீர் வடித்தேன். செல்வ வளம் பெற்றுச் சிறந் திருந்த தாயகம் வறிய நிலை அடைந்ததைக் கண்டு உள் ளம் வருந்தினேன். இழிந்த குலம் என்றும் உயர்தங் குலம் என்றும் வகுத்ததினால் உண்டான இழிவினை நினைத்தேன். மாரி சிலரை வரைந்து பெய்யவில்லை. காற்று சிலரைக் கடிந்து வீசவில்லை. கதிரோன்

சிலரைக் காயேன் எனவில்லை. பின் எங்கிருந்து பிறந்தது இந்த இழிகுலம்? எனப் பேசினேன். மனிதனை அறிவைக் கண்டு, பண்பைக் கண்டு மதிக்காமல் பிறப்பைக் கண்டு மதிப்பது அடுக்காது என உரைத்தேன். சமரச சன்மார்க்கமே தமிழரின் நெறி என்பதைச் சுட்டிக் காட்டினேன். செயல் பல புரிந்தேன். அதன் காரணமாகத் 'தொட்டால் ஒட்டிக் கொள்ளும்' என விலகிச் சென்றவர்கள் எல்லாம் தோள்மீது கைபோட்டுச் செல்வதை என் வாழ்விலே கண்ணாரக் கண்டேன்.

வள் :— நாடு நலம்பெறப் பாடு பலபட்ட பெரியீர்! பிறப்பிலே உயர்வு தாழ்வு கிடையாது. எல்லா உயிர்க்கும் பிறப்பு ஒன்றுதான். ஆனல் செய்யும் தொழிலால் சிறப்பு மட்டும் ஒவ்வாது.

பிறப்போக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்போவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

திரு. வி. க :— வண்மை மிகக் கொண்ட வள்ளுவப் பெருந்தகையே! நாட்டின் இழிநிலையைப் போக்கத் துணிந்த என் கண்களுக்கு வேறொரு துயரம் பட்டது. வானத்தை முட்டித் தகர்க்கும் அளவிற்கு எழுந்திருக்கும் தமிழர் வண்ணக் கோயிலைக் கண்டேன். மாடமாளிகைகளை, மஞ்சுதவழ் செய் குன்றுகளை, மயிலாடும் சித்திரச் சோலைகளை, மாணிக்கத்தை, முத்தினை, பொன்னினைக் கண்டேன். தங்கத்தை எடுக்கக் கனியில் மூழ்கி, இருளோடு போராடி வெப்பத்தில் கலந்து வெளிவரும் தொழிலாளியின் வியர்வைத் துளியைக் கண்டேன்.

ஆழ்கடலில் முத்தெடுக்க மூழ்கும் தொழிலாளியின் இதயத்தில் மூடங்கிக் கிடக்கும் மூச்சை, செல்லும் பாதையை, சிறந்த மாடங்களைக் கட்டிய தொழிலாளியின் கைகளை எண்ணினேன். அந்த உயிரோவியங்கள் இன்றிருக்கும் நிலையைத் திரும்பிப் பார்த்தேன். வீதியின் ஓரத்திலே, சாக்கடை அருகிலே, ஆலமர அரசமர நிழலிலே, மணலே மெத்தையாய், நிலவும், கதிருமே விளக்காய், காற்றே உணவாய், கந்தலே உடையாய், கதியற்று நிற்கும் அவர்கள் வாழ்வு உயரப் பாடுபட எண்ணினேன். பரந்துகிடந்த தொழிலாளிகளை ஒருங்கு திரட்டினேன். பைந்தமிழ் மொழியால் வாழ்வு உயரும் வழிகளை அவர்கட்குக் கூறினேன். அதன் பயனாக 1918-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27-ந் தேதி தொழிலாளர் சங்கம் நிறுவப்பட்டது.

திருவாடியா அவர்கள் சங்கத் தலைவரானார். நான் துணைத்தலைவனாய் இருந்து பணியாற்றினேன். இந்தச் சங்கத்தையொட்டி நாடெங்கும் பல சங்கங்கள் நிறுவப் பெற்றன. தொழிலாளர் முன்னேற்றங் கண்ட பலருக்கு ஆத்திரம் பொங்கிற்று. எதிர்ப்புகள் காட்டினோர் சிலர்; இந்தியாவிற்குத் தொழிலாளர் சங்கம் வேண்டுவதில்லை எனக் கட்டுரை தீட்டினோர் சிலர்; அச்சுறுத்தினோர் சிலர்; பிரித்தாளும் சூழ்ச்சியினால் சங்கத்தை அழித்துவிடலாம் என எண்ணினோர் சிலர். இத்தனை எதிர்ப்புகளுக் கிடையேயும் நாங்கள் குன்றாது, குறையாது வளர்ந்தோம். என் வாழ்நாள் எல்லாம் பிறர் வாழ்விற்காகவே பாடுபட்டேன். பிறர் படும் துன்பத்தை நான் படும் துன்பமாகவே கருதினேன். அத்துன்பத்தைத் துடைக்கப் பாடுபட்டேன். இவ்வாறு நான்

பாடுபட்டு உழைத்த காரணத்தால் இன்று தொழிலாளர்கள் ஓரளவு துயரம் நீங்கி வாழ்கிறார்கள். அன்னாரின் எதிர்கால வாழ்வு நலம்பெற்று நனி சிறந்தோங்குக.

வள்:— பிறர் நலம் பேணிய பெரியோய்! தனக்கென முயலாது பிறர்க்கெனவே முயலும் பெரியோர்களால்தான் இவ்வுலகம் அன்றுமுதல் இன்றுவரை நிலைபெற்று நிற்கின்றது. பிறர்தம் மகிழ்ந்த முகத்தைக் காணுவதில் உங்கள் மனம் விரும்பியது. அல்லற் பட்டோர்தம் அல்லலை நீக்கி, அவர்தம் முகத்தில் தவழும் புன்னகையில் ஒருவித இன்பத்தைக் கண்டீர்கள். அறிவு பெற்றதன் பயன் அதுதான். பிறர் வருத்தங் கண்டு நமக்கென்ன என்று இருக்கும் மனிதனுக்கு உள்ள அறிவால் பயன் ஒன்றுமில்லை. அறிவு பெற்ற பயனே பிறர் துன்பம் துடைப்பதுதான்.

அறிவினா னாகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை.

திரு. வி. க. :— இனிக்கும் குறள் தந்து எனை இன்பத்தில் ஆழ்த்திய தனிப்பெருமை பூண்ட தமிழ்த் தேவே! என் வாழ்வு பல பல துறைகளால் சூறையாடப் பெற்றது. அதனுள் ஒன்றுதான் அரசியல். அரசியல் என்பது இன்பத் தென்றல் அல்ல; கொந்தளிக்கும் கடல், குமுறும் எரிமலை, சுழன்றடிக்கும் சூறாவளி என்பதனை அதனுள் புகுந்த பிறகுதான் நான் தெரிந்து கொண்டேன். ஆசிரியத் தொழிலை விட்டு நீங்கிய நான் சுதந்திர வேட்கையால் துடித்தேன். 'என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்' என்று ஏங்கினேன். 'என்று

மடியும் எங்கள் அடிமையின் மோகம்' எனத் துடித்தேன். உரிமைக்காகப் போராடிய காங்கிரஸ் என்னும் இயக்கத்தில் சேர்ந்தேன். நாட்டு மக்கள் உள்ளத்தில் உணர்ச்சி பொங்க உரிமைத் தன்மையை எடுத்துக் கூறினேன். காஞ்சிபுரத்தில் நடந்த மாகாண மகாநாட்டிற்குத் தலைமை தாங்கி, உரை நிகழ்த்தினேன். தேசபக்தன், நவசக்தி முதலிய பத்திரிகைகளின் மூலம் என் தொண்டினைப் பரப்பினேன். அன்று பாராண்டோரது வெறுப்பையும் தேடிக்கொண்டேன். 144-வது சட்டம் தாண்டவமாடிய இடங்களில் எல்லாம் நான் தமிழ் மணத்தோடு சுதந்திர மணத்தைப் பரப்பினேன். ஆனால், அரசியலார் என்னைக் கைது செய்யவில்லை. 'ஆலைத் தொழிலாளர் கலகத்தினால் நீ உள்ளே அடைக்கப்படுவாய்' என என்னைச் சிலர் அச்சுறுத்தினர். நான் அஞ்சவில்லை. இவ்வாறு அஞ்சாது, அயராது நாங்கள் பாடுபட்ட காரணத்தினால்தான் 'சுதந்திர நாட்டிலிருந்து விடுதலை ஆனேம்' என்ற உணர்ச்சியோடு விண்ணுலகை அடைந்தேன்.

வள் :— செய்தக்க செய்த செயல் வீர! தாங்கள் உரிமைக்காகப் போராடினீர்கள். அந்நியருக்கு அடிமைப் படாது 'ஆண்ட திருநாட்டில் ஆங்கிலேயன் ஆட்சியா' என நானும் வெகுண்டதுண்டு. சுதந்திர தாகம் எல்லோருக்கும் பொங்கிய நேரத்தில் தாங்கள் சுதந்திரப் போரைத் தொடங்கினீர்கள். 'இத்தருணம் தப்பிடில் மறுதருணம் வாய்ப்பது அரிது' என இடம் நோக்கி, காலநோக்கித் தாங்கள் செய்த செயலால் தான் நாம் பிறந்த தாயகம் உரிமையில் திளைக்கிறது. ஆங்கிலேயர் ஆட்சியின் அழிவும், இந்தியர் ஆட்சியின்

ஆக்கமும் தங்கள் போராட்டத்திலே தோன்றின. உரிமையாகிய ஊதியத்தை அடைந்தீர்கள்.

> அழிவதூஉம் ஆவதூஉ மாகி வழிபயக்கும்
> ஊதியமும் சூழ்ந்து செயல்.

திரு. வி. க :— அறிவெனும் சிறந்த திருவினைப் பெற்றீர்! அறத்தைப் பலர் பலநோக்கோடு செய்கிறார்கள். புகழை விரும்பி இறைவன் கோயில் அமைத்து அதில் தமது பெயரைப் பொறித்து வைக்கிறார்கள். எண்ணற்ற தீய செயல்களால் ஏழை மக்களைத் துன்புறுத்துகிறார்கள். தீய எண்ணங்களின் உறைவிடமாகத் தங்கள் உள்ளத்தை உண்டாக்கிக் கொண்டு வெளியிலே அறநெறியை வாய் இனிக்கப் பேசி வருவார்கள். குற்றம் பல தெற்றெனச் செய்யும் அவர்கள் அணியும் மாலையாலும், பூணும் வேடத்தாலும் தங்களை மறைத்து வாழ்வார்கள். நான் இதற்கெல்லாம் விதிவிலக்கானவன். மனத்தைத் தூய்மைப் படுத்த எண்ணினேன். மனதிலே மாசு நீக்குவதே அறம் எனக் கருதினேன். மற்றவை அனைத்தையும் ஆடம்பரச் செய்கை என எண்ணினேன். அதன்படியே மன மாசு நீங்கிய தூய அற வாழ்க்கை வாழ்ந்தேன்.

வள் :— மாசற்ற பெரியீர்! தங்கள் கருத்தைத் தெளிவாக்கும் குறட்பா,

> மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
> ஆகுல நீர பிற.

என்பதேயாம்.

திரு. வி. க :— அறியாமை இருளோட்டி, அறிவு ஒளி நாட்டும் அறிஞரே! என் வாழ்நாள் எத்தனையோ

துறைகளால் சூறையாடப்பட்டாலும் கடவுள் நெறியிலே என் முழு எண்ணமும் நின்றது. அழகுதவழ் இடங்களில் எல்லாம் ஆண்டவனைத் தான் கண்டேன். இயற்கையின் அத்தாணி மண்டபத்தில் எல்லாம் இறைவனின் திருவோலக்கத்தைத்தான் கண்டேன். செங்காந்தள் வெண்கடம்பு செறிந்திருக்கும் குறிஞ்சி நிலமும், அக் குன்றத்தே அலைவீசிக் குளிர்காட்டி நிற்கும் கோலச் சுனையும், குளிர் காற்றும் வந்து படிந்து, வளமான கதை சொல்லும். முகிற் கூட்டமுட, அம் முகிற் கூட்டத்தைக் கண்டு தோகைவிரித்தாடும் மயிற்கூட்டமும் என் மனதைக் கவர்ந்தன. அந்த இயற்கைப் பொருள்களில் எலலாம் எழில் முருகன் திருவுருவம் கண்டேன். கானுறும், காடும் செறிந்த முல்லைநிலம், கன்னலும், செந்நெலும் செழித்து வளரும் கழனி சூழ்ந்த மருதநிலம், கடலும், கழியும், கைதையும், காட்சி தரும் நெய்தல் நிலம் - இவை எங்கணுமே முருகனைத்தான் கண்டேன். தமிழ் இறை, ஆதி இறை, அழகுத்தெய்வம் அவன் என உணர்ந்தேன். முருகா! முருகா !! என முழங்கினேன். ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும் அவ்விறைவன் எனக்கு அழகாய், மணமாய், தமிழாய்க் காட்சி தந்தான்.

இவ்வியற்கைக் காட்சியோடு கலந்து இயற்கையே இறைவன்; இயற்கையே முருகன் என உணர்ந்தேன். அந்த இன்பத்திலே திளைத்து என் அன்னையகம் நீத்து அமரர் அகம் புகுந்தேன்.

வள் :— எல்லாத் துறையிலும் வல்லாண்மை காட்டிய அரசியல் அறிஞரே! புரட்சிக் கவிஞரே!

அருந்தமிழ் முனிவரே! கற்றபயன் பெற்றது கண்டு களிப்பெய்துகிறேன். கடவுளை மறந்த கற்றவர்க்குக் கற்றதினலான பயனே கிடையாது. உண்மை இறைவனை ஓர்ந்து அவன் அருளை வந்தித்து வாழ்த்துவது தான் கற்றபயன். இப் பயனைத் தாங்கள் அடைந்து மற்றவர்க்கும் வாழ்வின் வழிகாட்டியாக நின்றீர்கள்.

திரு. வி. க:— கடவுள் நெறிதந்த கவிஞரே! குறளைக் கேட்டேன். உள்ளம் குளிர்ந்தேன். தங்கள் மூலமே 1330 அருங்குறட்கும் விளக்கம் கேட்க விரும்புகின்றேன். கம்பரையும், இளங்கோவையும் சென்று பார்த்துவிட்டு மீண்டும் தங்களை வந்து சந்திக்கிறேன். நன்றி மறவேன். வணக்கம்.

வள்:— வணக்கம்.

---

4. வள்ளுவரும் கட்டபொம்மனும்

கட்டபொம்மன்:— தெய்வத் திருவளரும் செல்வத் தமிழ்நாட்டில் வையம் புகழவரும் வான்விளக்கே! வள்ளுவரே! வணக்கம். அன்பன் கட்டபொம்மு.

வள்ளுவர்:— கலைவளரும் தென்பாண்டிக் கட்ட பொம்மு! வருக! வருக! அடிமை மோகத்திற்கு ஆதியிலேயே அதிர்வேட்டு வைத்தவன் நீயல்லவா! உன் வாயில் இருந்து மறந்தும் கூட 'அடியேன்' என்ற வார்த்தை வராதே. மகிழ்ச்சி. உன் வருகையை எண்ண எண்ண இதயம் மலர்கிறது.

கட்:— சிந்தனைச் சிற்பியே! சிறகடித்துப் பறக்கும் தங்கள் கற்பனைப் பறவையோடு வானில் பறக்க என்னால் இயலுமா? உயிர்ச்சக்தி பெற்ற உணர்ச்சிக் குறள்களை நேரிலேயே கேட்க வேண்டும் என்பது என் நீண்டநாள் விருப்பம்.

வள்:— விருப்பம் நிறைவேறும்; வேதனை களைக!

கட்:— பாவேந்தர் பாராட்டும் நாவேந்தரே! அறிஞர் தங்கள் குறளைப் பறையறைந்து குமரித் தமிழ் வளர்க்கிறார்கள். மேடையிலே அவர்கள் குறள் கூற மேனி சிலிர்த்தேன் நான்; என்றாலும் என் அரசியல் ஓடையிலே ஆழப்பதியவில்லை. குறள் என்ற கடலிலே மூழ்கி அறிவென்னும் முத்தெடுக்க முயன்றேன்; முயற்சி வெற்றி பெறவில்லை. என் இயலைக் கூறுகின்றேன்; எடுத்துரைப்பீர் நும் குறளை.

வள்:— வன்மறஞ்சேர் திருவாயால் வாழ்க்கை தனைக் கூறு. உள்ளம் மகிழ்ந்தே உரைப்பேன் குறள் அதனை.

கட்:— உரைக்கும் மொழியாலே, உயிர் தந்த நாட்டாலே தளர்ச்சியற மொழிகின்றேன்; தண்ணார் செந் தமிழன் நான். பெருமைமிக்க எனது முன்னோர் பெல்லாரி மாவட்டத்திலே தோன்றினர். அங்கு எங்கும் பஞ்சம். வறுமை தலைவிரித்தாடியது; கொடுமை கொத்திக் குடித்தது; எனது முன்னோர் வளம் கொழிக்கும் தமிழ் நாட்டை நோக்கி ஓடி வந்தனர்; தஞ்சம் புகுந்த தெலுங்கருக்குத் தங்க இடம் கொடுத்தது தமிழகம். அதுமட்டு மல்ல; அரச பதவியையும் அன்போடு அளித்தது. பால்ராஜா என்பவனின் மகன் பட்டத்திற்கு உரியவன் ஆனான். புதியவரைப் போற்றும் பண்பு தமிழர்க்கே தனிச்சிறப்பாக உள்ளது அன்றோ!

வள்:— தமிழர்க்கு இயற்கைப் பண்பு தான்.

வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று.

என்னும் நற்கருத்துடைய நல்லோர்கள் தமிழர்கள்.

கட்:— எனது முப்பதாவது வயதில் ஆட்சிக்கு வந்தேன். ஆட்சிக்கு வந்த இரண்டாவது ஆண்டிலே ஆர்க்காட்டு நவாப் அடிபணிந்தான் ஆங்கிலேயருக்கு. நாடோடிக் கூட்டத்திற்கு உணவாகச் சிற்றரசர்களைக் காட்டிக் கொடுத்தான். வாய்பேச வல்லமையற்ற ஊமைக் கூட்டம் உணர்விழந்து அடிபணிந்தது; வாணிகக் கூட்டம் வாலாட்டியது; வஞ்சக வலையை என்னிடம் வீசினர்; நெஞ்சம் கலங்கவில்லை. வரி கட்ட மறுத்தேன்; 'வாய் பொத்திக் கைகட்டு' என வாதாடினர்; வணங்க மறுத்தேன். கைக்கூலி

வாங்கும் கயவர்கட்குப் பணம் கொடுத்து உள்நாட்டுக் குழப்பத்தை உண்டாக்கினர்; உதறித் தள்ளினேன். பிரித்தாளும் சூழ்ச்சியிலே பெயர் பெற்றவர்கள் அல்லவா ஆங்கிலேயர். ஏமாந்த எட்டயபுர மன்னனை எடுப்பார்கைப்பிள்ளையாக வைத்து என்னை அழிக்கத் திட்டமிட்டனர். வாளெடுத்தேன்; வாகைசூட நினைத்தேன்; மேலோங்கிச் செல்கின்ற அவர்கள் பேராசைக் காடதனை வேரோடு அழிக்க முனைந்தேன்; குற்றம் எனக் கருதப்பட்டது. இது குற்றமா?

வள்:— *நீதி நூலின் நெறிதவறாச் செல்வ! வளர்கின்ற பயிரைத் தடுக்கின்ற களையைப் பிடுங்கி எறிந்தால் அது குற்றமாகுமா? ஆகாது. கொடியோரைத் தண்டித்தலும் குற்றமல்ல.*

> கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
> களைகட் டதனொடு நேர்.

கட்:— *அறிவின் நிலைக்களமே! ஆற்றல் மிகு தலைவ! இலட்சியப் பாதையில் செல்லும் எவரும் இராமலிங்கவிலாசம் என்னும் இன்பபுரி மாளிகையை உணராமல் இருக்க முடியாது. இராமநாதபுரத்திலே எழிற்காட்சி தந்த இராமலிங்க விலாசம் என்போன்றவர்கட்குக் கொடுநெருப்பாய்க் கோரக் காட்சி தந்தது. ஜாக்சன் என்னும் சண்டாளன் அங்குச் சதித் திட்டத்தை விரித்தான். உடன்பிறந்த தம்பி ஊமைத்துரை, ஒப்புயர்வற்ற நண்பன் தானபதி, வேற்றூரை விரட்டியடிக்கும் வீரன் வெள்ளையத் தேவன் ஆகிய அனைவரையும் வெளியே நிறுத்திவிட வேண்டும் எனச் சட்டம் பிறப்பித்தான் ஜாக்சன். வாள்*

ஒன்றைத் தவிர எனக்கு வேறு வகையில்லை. வாயிலை நோக்கி விரைந்து சென்றேன்; மன்னன் வந்திருக்கிறனே என மதிப்புத் தந்தானு? இல்லை. மலர் முகம் காட்டினனு? அதுவும் இல்லை. மாருகப் பேசினன்; குற்றம் பல கூறினன்; கோபமாகப் பேசினேன் நான். 'அடிமையாக இரு' என்றான்; ஆவியே போவதாக இருந்தாலும் அதற்கு மட்டும் சம்மதியேன் என்றேன். 'சிறைக்கம்பிக்கு இடையே சீரழிவாய்' என்றான்; சிரித்தேன் நான். போர் மூண்டது. அவனுக்கோ ஆட்பலம்; எனக்கோ வாட்பலம். மாடியில் இருந்து மண்ணில் காலடி படும்வரை கடும்போர்; வெற்றி பெற்றேன்; இது கண்டு வெகுண்டு எழுந்தான் கிளார்க் என்பான். 'கட்டபொம்மனின் கால்களை ஒடித்தாலன்றி கம்பெனியின் ஆட்சி கடுகளவும் நிலை பெருது' எனக் கர்ஜித்தான்; பயமுறுத்தினன்; என் வாள் அவன் மீது பாய்ந்து பதம் பார்த்தது. கிளார்க் பிணம் ஆனன்.

வள்:— நாட்டின் பெருமைதனை நானிலத்தில் பரப்பி வந்த காட்சிக்கு மிக எளியாய்! மனிதப் பண்பாடு நீங்கிய மக்கள் ஜாக்சனும் கிளார்க்கும். பிறர் வாழ்விலே பெரும் பொருமை கொண்டவர்கள். அவர்கள் வாழ்வு தானகவே அழிந்தது. அழுக்காறு என்ற பாவி அவர்களை அழித்து விட்டான்.

அழுக்கா றெனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்.

மனம் குளிர வரவேற்புக் கிடைக்கும் என எண்ணி நீ மாடிக்குச் சென்றாய். ஜாக்சன் வீசிய கடுஞ்

சொற்களை ஏற்ருய். கண்ணோட்டமின்றி நடத்தப்பட்ட நிலைகண்டு நெஞ்சம் ஒடிந்தாய். உன்னைத் துன்புறுத்தியதால் ஜாக்சனின் உள்ளத்துத் திட்டம் உயிர் இழந்தது. கடுஞ்சொல் உடையவனாய் கண்ணோட்டம் இன்றி இருக்கின்ற கயவனது வாழ்வு வளராது.

கடுஞ்சொல்லன் கண்ணிலன் ஆயின் நெடுஞ்செல்வம்
நீடின்றி ஆங்கே கெடும்.

மக்கள் மனம் கலங்கத் தீயனசெய்யும் அநீதிக்காரர்கள் அழிந்து ஒழிவார்கள். அல்லலைக் கண்டு மனம் ஆற்ருமல் மக்கள் விட்ட கண்ணீர் முறை தவறிச் செல்பவர்களின் பெருஞ் செல்வத்தைக் கெடுத்துவிடும். ஜாக்சனின் ஆசை சரிந்தது. கிளார்க்கின் வாழ்வு கெட்டது.

அல்லற்பட் டாற்ரு தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.

கட்:— உயர்நெறியை ஊட்டிவந்த உத்தமரே! நல்ல பண்புகள் நிறைந்த நாவலர் தானுபதிப்பிள்ளை. அவரை நினைத்ததும் காணுத இன்பம் காணுகிறேன். என் உரிமை வேட்கைக்கு உயிர் ஊட்டிய உயர்குல விளக்கு அவர். வாழ்வென்னும் மலைச்சரிவில் கால் தவறி உருண்டோடிய நாட்கள் பல. அப்பொழுது என்னை இருகையாலும் ஏந்தி எடுத்துப் பாதுகாத்த பைந்தமிழ்ச் செல்வர். தவம் பெற்ற செல்வம் தானுபதிப்பிள்ளை. இன்பம் வரும் பொழுதும் இடுக்கண் வரும் பொழுதும் என்னைவிட்டு அவர் பிரியவில்லை. இராமலிங்க விலாசத்திலே ஜாக்சனின் பயங்கரப் பார்வைக்கும் பண்பில்லாப் போக்குக்கும்

வாழ்வைக் கொள்ளை கொடுத்தார். இன்னல் பெற்ருர் நாட்டுக்காக; எள்ளளவும் சலிக்கவில்லை. 'போக் கைமாற்றிக் கொள்' என ஜாக்சன் சூழ்ச்சி பல செய்தான்; புறக்கணித்து விட்டார். 'இறுதிவரும்' என எச்சரித்தான்; 'உறுதி விடேன்' என உரக்கக் கூறினர். கைதிக் கோலத்துடன் கம்பெனித் தலைவர்களின்முன் திருச்சி நீதி மன்றத்திலே நின்ற போதும் கண்கலங்க வில்லை. பேட்டி காண அழைத்துப் பேயாட்டம் ஆடிய ஜாக்சனின் தவறுகளை வரிசையாகக் கூறினர். திருச்சி மன்றம் விடுதலை அளித்தது என்ருலும் அமைதி ஏது?

சிலநாட்கள் சென்றன. மீண்டும் போர். பாளையக்காரர் ஒருவர் வீட்டிலே பகைவர்களைக் கொல்வதற்காகப் பதுங்கி இருந்தோம். அங்கும் அந்நியர் படை முற்றுகை இட்டது. வெட்டி வீழ்த்தினேம். தானுபதிப்பிள்ளையைத் தனியே விட்டு ஓடும் நிலைமை ஏற்பட்டது. அது கண்டு அவர், பதறவில்லை; பாவி எனப் பறை சாற்றவில்லை. என் நட்பின் பழமையை நினைத்துப் பகைவரோடு போரிட்டார். புல்லர்களின் கைவசப்பட்டார். 'தானுபதியின் தலை தரையிலே உருள வேண்டும்' எனப் பானர்மென் ஆணை பிறப்பித்தான். என்னை அணைப்பதற்கு முன் மரண தேவி அம்மாவீரனை முத்தமிட்டாள்.

வள்:— நண்பர் திருவுளத்தை நன்முறையில் கூறிவந்த பொன்னர் திருமேனிப் புரவலனே! தானுபதிப் பிள்ளையின் அகநட்பைப்பற்றி அழகாகக் கூறினய். மகிழ்கிறேன்.

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு.

நல்லன நவின்று, அல்லல் வந்தபோது ஆருயிரையும் நட்பிற்காக அளித்தார் என்றாய்;

அழிவின் அவைநீக்கி ஆறுய்த் தழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு.

கட்:— வளரும் பருவத்திலேயே முள் மரத்தை அழிக்க வேண்டும். வளரவிட்டால் வயிரம் பெற்று வெட்டுகின்ற கருவியை மட்டுமல்ல; வெட்டுகின்ற வனையும் பதம் பார்த்துவிடும். அதே போல அந்நியரை ஆரம்பத்திலேயே அழிக்க வேண்டும் என முதற் போர் தொடுத்தேன். ஆங்கிலப் படை என் கோட்டையை முற்றுகை இட்டது. நடைபெற்ற போரிலே பாஞ்சாலங் குறிச்சி வீரர்கள், காலன் என்னும் ஆங்கிலேயனைக் காலனிடம் அனுப்பினர். பானர்மென் என்ற தளபதி பல்லை நெறித்தான். எனது வீரர் எள்ளிநகையாடினர். ஆனல்... போரின் முடிவு. வெற்றி கண்ட பாஞ்சாலம் வீழ வேண்டியது என்பதே. வேற்றுருவம் எடுத்து ஓடி மறைந்தேன். தேடுவதற்கு ஆள் அனுப்பினர் தீயோர்கள். திருக்களம்பூர் என்ற ஊரில் தங்கி, திருச்சி செல்ல நினைத்தேன். திடீரென எண்ணம் மாறிற்று. புதுக் கோட்டை செல்ல நினைத்தேன். வழியில் வந்த சிலர், 'விருப்ப மேலீட்டால் விருந்துக்கு அழைக்கிறான் புதுக் கோட்டைமன்னன்' என்றனர். விரைந்து சென்றேன். மன்னன் வரவேற்றான்; உணவு உண்டேன்; மேலே உறங்கச் சென்றேன்; என் மேனியிலே என்றும் இல்லாத ஒரு பொலிவு காணப்பட்டது.

வள்:— உன் வாழ்வியலைச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தாய்.

> பலசொல்லக் காமுறுவர் மன்ற மாசற்ற
> சிலசொல்லல் தேற்றா தவர்

என்ற குறளுக்கு உன் வாழ்வு ஓர் எடுத்துக்காட்டு. செம்மைச் சிறப்புற்றுச் சிந்தை குளிர்விக்கும் நண்ப! நாட்டின் உயிர் வளர்த்த நாயகமே! மெய்சிலிர்க்க உரைக்கின்றாய்; மேல் நிகழ்ச்சி என்ன?

கட்:— சிறிது நேரம் தூங்கினேன். எழுந்ததும் என்னைச் சுற்றி எதிரிகள் முற்றுகையிடக் கண்டேன். என் நாட்டைச் சேர்ந்தோர் எனக்கு வாங்கித் தந்த பரிசு கையிரண்டுக்கும் விலங்கு.

வள்:— நன்மை பல செய்த நல்லோய்! துன்பங்களை எல்லாம் இன்பம் எனக் கொண்டாய். பகைவரும் பாராட்டும் பெரும்புகழ் பெற்றாய்.

> இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகும்தன்
> ஒன்னார் விழையும் சிறப்பு.

கட்:— பொங்கும் தமிழ்க் கடலில் புதுமை புகுத்தி வந்த தங்கும் புகழ் அரசே! மங்காத என் வாழ்வொளி மங்கியது. நாடு உரிமை பெற உழைத்த நான் குற்றவாளிக் கூண்டிலே. ஓட்டை ஏந்திவந்த ஒரு கூட்டம் நீதிபதி ஆசனத்திலே. கயத்தாற்றின் கயிறு எனக்காகக் காத்துக்கொண்டிருந்தது. என் மனத் திரையிலே, பானர்மென்னின் பாசம் பிடித்த உருவம் ஒரு பக்கம். காட்டிக் கொடுத்த மன்னனின் வடிவம் மற்றொரு பக்கம். எங்கும் உரிமை மணம்

வீசவேண்டும் என எண்ணி, மரண தேவியை முத்தமிட்டேன்.

வள் :— சிதையாத சிலையாகித் தேசத்தில் வாழ்கின்ற மலையனையாய்! இலக்கிய வாழ்வு வாழ்ந்து எல்லோர் இதயத்திலும் இடம் பெற்றாய். உன் புகழ் வாழ்க!

கட் :— உங்கள் குரல் கொடுத்த குறள் கேட்டேன். நன்றி. வணக்கம்.

வள் :— வணக்கம்.

---

5. வள்ளுவரும் திலகரும்

திலகர்:— எட்டுத் திக்கிலும் தன் புகழ்முரசைக் கொட்டி நிற்கும் வள்ளுவரே! மனத்திட்பம், வினைத் திட்பம் முதலியவற்றின் மாண்பை விளக்கும் தங்கள் திருக்குறளின் சிறப்பை அறிஞர் பலர் சொல்லக் கேள்விப்பட்டுள்ளேன். தமிழ் அறியாததால், ஓதி உணர்ந்ததில்லை. உறுதி படைத்த என் உள்ளத்தில் உதித்து உருப்பெற்ற நிகழ்ச்சிகளைக் கூறுகிறேன். செந்தமிழ்க் குறள் உலகில் என்னைத் திளைக்கச் செய்வீர்களாக.

வள்ளுவர்:— நெற்றித் திலகம் என நீள் நிலத்தில் வாழ்ந்துவந்த பெற்றிமிகு திலகரே! வருக! வருக!! தங்களோடு உரையாடுவது எனக்கு உவகை தருகிறது.

தில:— அறிவுப் பெருஞ்சுடரே! நான் பிறந்த நிலம் என்னை வல்லவன் ஆக்கிற்று. மலைகள் சூழ்ந்து மனதைக் கவரும் மகாராட்டிரத்தில் பிறந்தேன். மலைக் குன்றுகளிலே விளையாடினேன். மலைத்தொடர்களிலே பாடி மகிழும் பறவைகளின் ஒலியைக் கேட்டு, 'இது மகாராட்டிரர் மாற்றாரைப் போருக்கு அழைக்கும் புரட்சிப்பண்' என அஞ்சி அலறி ஓடுவர் அந்நியர் என்றால், மகாராட்டிரரின் மனவலிமையை எங்ஙனம் எடுத்தியம்ப இயலும்? வீரர் பலர் தோன்றிய வெற்றித் திருநாட்டிலே தோன்றினேன். குதிரை ஏற்றத்திலும், குறிபார்த்துச் சுடுவதிலும் பெயர் பெற்ற கேசவராவ் எங்கள் குடும்பத்து முதல்வர். இவரின் மகன் கல்வி என்னும் நங்கையை மணந்து, கவிதைப் புலவனைப்

பெற்றெடுத்த கலையரசர் கங்காதரராவ். கங்காதர ராவின் குலத்துக்கு விளக்காய், குணப்பெருங் குன்ருய், நேர்மையின் நிலைக்களமாய் விளங்கிய இராமச் சந்திரரே என் அருமைத் தந்தையார். பார்புகழும் பம்பாய் மாகாணத்திலே எழில் தவழும் இரத்தினகிரி என்னும் நகரிலே 1856-ஆம் ஆண்டு நான் தோன்றி னேன். எனது பெற்ரோர் எனக்கு அறிவு வளர அழ கான கதைகள் பல கூறினர். 'உயிரைவிட ஒழுக்கமே சிறந்தது' என இடித்துரைத்தனர். ஒழுக்கத்தின் உயர்வைப்பற்றி விளககமாக விரிவுரை செய்தனர். அவர்கள் ஒழுக்கத்தைப் பற்றி இளமையிலே தந்த பொன்னுன சொற்கள் எனது வாழ்வுப் பாதையை வளமுள்ளதாக்கின.

வள் :— சிந்தைக்கு அமுதூட்டும் திருவிளக்கே! ஒழுக்கம் ஒரு ஒப்புயர்வற்ற செல்வம். தீய ஒழுக்கத் தால் வாழ்க்கை பாழ்பட்டு இன்னல் அடைந்தோர் பலராவர். ஒழுககம் வேண்டுமா? உயிர் வேண்டுமா? எனக் கேட்டால், ஒழுக்கமே வேண்டும் என உரைப் பர் பெரியர். ஒழுக்கம் உயர்வைத் தரும். இழுக்கம் இழிவைத் தரும்.

> ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
> உயிரினும் ஓம்பப் படும்.
>
> ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
> எய்துவர் எய்தாப் பழி.

தில :— எனது இளமைக் காலத்தை நினைக்க நினைக்க இன்பம் பிறக்கிறது. ஆசிரியராக இருந்து அரும்பணி ஆற்றிய எனது தந்தை என் மனப்பாடச்

சக்தி கண்டு, மனம் மிக மகிழ்ந்து பரிசுபல தந்தார். 'நாட்டிற்கு உழைக்கும் நன்மகனைப் பெற்றெடுத்துள்ளோம்' என்று பூரித்தார் என் தாயார். அந்தோ! அவர்கள் அன்பினாலே இன்பக் கனவுகள் கண்டுவந்த நான் அனைத்தையும் இழக்க நேரிட்டது. என் பத்தாவது வயதிலே தாயை இழந்தேன். பதினைன்காவது வயதிலே தந்தையையும் இழந்தேன். பேணி வளர்த்த பெற்றோரை இழந்து உள்ளம் உடைந்தேன். அப்பொழுது எனது சிறிய தந்தையாரும் தாயாரும் எனக்கு உதவி பல புரிந்தனர். அவர்கள் என்னைப் பார்த்து, 'உருக் குலைந்த உத்தமனே! அஞ்சாதே! பெற்றோரை இழந்த உனக்குப் பேருதவி புரிய நாங்கள் இருக்கிறோம். உனது நல்வாழ்வே எங்கள் வாழ்வு' என எடுத்தியம்பி என் இன்னலைப் போக்கினர். அவர்கள் செய்த உதவி சிறிதே என்றாலும், அதை நான் உலகத்தை விடப் பெரியதாக நினைக்கிறேன்.

வள் :— உண்மைதனை உரைக்கும் உயர் தலைவ! தங்கள் சிறிய தந்தையாரும் தாயாரும் காலத்தில் செய்த உதவியை ஞாலத்தைவிடப் பெரிதாகக் கருதுகிறீர்கள். மகிழ்கின்றேன்.

> காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
> ஞாலத்தின் மாணப் பெரிது.

தில :— பெரியீர்! மணப் பருவம் வந்ததும் மனதிற்கிசைந்த மங்கை ஒருத்தியைத் தேடினோம். சீலம், சிந்தை, கோலம் அனைத்திலும் சிறந்து விளங்கிய தபீபாய் என்னும் பெண்ணை எனது பதினைந்தாவது வயதிலே மணந்து கொண்டேன். தவத்தால் பெற்ற

தனிச் செல்வம் தபீபாய். எனது வருவாய் அறிந்து செலவு செய்வாள். குலம் விளங்குவதற் கேற்ற குணங்கள் அனைத்தையும் அவளிடத்தில் கண்டேன். விருந்தினர்களை விரைந்து வரவேற்பாள்; துறவியரைப் போற்றுவாள்; ஏழைகளிடத்தில் இரக்கம் காட்டுவாள். ஓர் நாள் நானும் அவளும் என் மாமனார் வீட்டிற்குச் சென்றோம். வறியவன் ஒருவன் வீட்டின் வாயிலிலே நின்று பிச்சை கேட்டான். தபீபாய் அந்த வறிய வனுக்குப் பிச்சை போட்டாள். போடும் பொழுது அரிசியோடு அழகிய நகை ஒன்றும் விழுந்துவிட்டது. தபீபாய் தயங்கி நின்றாள். அப்பொழுது நான் அவளைப் பார்த்து, விழுந்த நகையைத் திரும்பிப் பெற விரும்பாதே. வறியவன் அதை விற்று வாழட்டும்; உவகைகொள் என்றேன். 'கண்போன்ற தன் கணவன் கூறுகிறாரே' என்பதை எண்ணி ஏந்திழை யாள் மகிழ்வுற்றாள். மலர்ந்த முகம் கொண்ட தபீ பாயை வாழ்க்கைத் துணைவியாக ஏற்ற எனக்கு வாழ்கையில் ஒரு குறையும் ஏற்படவில்லை.

வள் :— இல்லறத்தைப் போற்றிவந்த ஏந்தலே! நும் இல்லாளின் இயல்புக்கு இதோ குறள் அறிக.

> தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
> சொற்காத்துச் சோர்விலாள் பெண்.
>
> இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
> இல்லவள் மாணாக் கடை.

தில :— தெள்ளு தமிழ்க் குறள் தந்த வள்ளுவரே! இடையறாது முயன்று எனது இருபத்து மூன்றாவது வயதிலே பி. ஏ., எல். எல். பி. ஆனேன். உயர்ந்த

பட்டங்கள் பெற்றிருந்தும் உயர்பதவிகளை நான் விரும்ப வில்லை. ஓடி வந்த செல்வங்களை உதறித் தள்ளினேன். கல்வி நிலையங்களை உண்டாக்கி நாட்டின் அறிவைப் பெருக்க வேண்டுமே என எண்ணினேன். இமயம் போன்று எண்ணத்திலே உயர்ந்து விளங்கிய அகர்க்கார் என்னும் அறிவுத் திறம் படைத்தோர் எனக்கு ஆருயிர் நண்பராகிப் பொது நலத் தொண்டிலே, கல்விப் பணியிலே எனக்குக் கைகொடுத்து உதவினர். பிறகு நண்பர் பலரும் ஊக்கம் அளித்தனர். எனது இருபத்து நான்காவது வயதிலே பொலிவுமிகும் புனாவிலே 'புனா ஆங்கிலப் பாடசாலை' தோன்றியது. தட்சிணக் கல்வி நிலையத்தை உண்டாக்கினேன். 'பெர்கூசன் கலாசாலை' என்ற கல்வி நிலையத்தையும் நானே தோற்றுவித்தேன். எண்ணையும் எழுத்தையும் மக்கள் தம் கண்ணெனப் போற்றவேண்டும் எனக் கருதினேன். உயர்ந்த நூல்கள் பலவற்றை மக்கள் கற்கவேண்டும். கற்கும் பொழுது ஐயம்திரிபறக் கற்கவேண்டும். கற்றபின் கற்ற நூல்கள் கூறுகின்ற ஒழுக்க நெறியில் தளராது நிற்க வேண்டும் என்பதே என் விருப்பம். 'மராட்டா' என்னும் ஆங்கில வார இதழையும் 'கேசரி' என்னும் மராட்டியச் செய்தித் தாளையும் நடத்திவந்தேன்.

வள் :— அறியாமை நீங்க அரும்பணி ஆற்றிய அண்ணலே! கல்வியே கண்ணெனக் கூறினீர்கள். உண்மைதான்.

> எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
> கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

நல்ல நூல்களைக் கற்க வேண்டும். ஐயந்திரிபறக் கற்க வேண்டும். கற்றபின் கற்றபடி நிற்கவேண்டும் எனக் கூறினீர்கள்.

> கற்க கசடறக் கற்பவை கற்றபின்
> நிற்க அதற்குத் தக.

தில :— கல்விக் கடலே! இராபோர்டு என்னும் ஆங்கிலேய அதிகாரி முறைதவறி நடந்தான். மோசக்காரன் ஆனான்; கைக்கூலி வாங்கும் கயவனாக மாறினான். இந் நிலைகண்டு மக்கள் மனம் புழுங்கினர். வழக்கு மன்றத்திலே விசாரணை தொடங்கிற்று. தீயநெறியிற் சென்ற இராபோர்டு ஆங்கிலேயரின் அரசியல் வித்தையால் குற்றம் செய்யாதவனாக ஆக்கப்பட்டான். அவனுக்கு மாறாகச் சாட்சி சொன்ன தாசில்தார்கள் வேலை இழந்தனர். இந்த நிலையிலே இடையறாது நான் போராடி வேலை இழந்த தாசில்தார்கட்கு இழந்த வேலையை மீண்டும் வாங்கிக் கொடுத்தேன். அடுத்தவர்கது உதவி செய்யவேண்டும் என்பதே என் குறிக்கோள்.

வள் :— வெற்றித் திருப்பெற்ற வீரரே! உங்கள் ஒப்புரவு மிக உயர்ந்தது. தேவர் உலகத்தும் இந்த உலகத்தும் ஒப்புரவு போல உயர்ந்தது கிடைப்பது அரிது. ஒப்புரவால் உயர்ந்த உங்கள் உள்ளத்தைப் பாராட்டுகிறேன்.

> புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறலரிதே
> ஒப்புரவின் நல்ல பிற.

தில:— கலையுலக வேந்தே! மராட்டிய மண்ணிலே பிறந்தவன் நான். மார்பில் விழுப்புண் பட்டு

மரண தேவியை முத்தமிடுவதையே மகிழ்ச்சி தரும் செயல் என மதிக்கும் மாவீரரின் வழித்தோன்றல் நான். மாற்றாரிடம் மண்டியிட்டு உரிமை பெற விரும்ப வில்லை. ஆங்கிலேயரை அழித்து ஒழிக்க முயன் றேன். எதிர்ப்புகள் பல வந்தன. எள்ளளவும் உறுதி குலையவில்லை. இதற்கிடையில் கர்சான் பிரபு வங்கா ளத்திலே இரட்டை ஆட்சியை உண்டாக்கியதன் கார ணமாக வங்காள மக்கள் மனம் குமுறினர். எரிமலை போல மனம் கொதித்தனர். 1906-ஆம் ஆண்டிலே கல்கத்தா நகரிலே காங்கிரஸ் மகாசபை கூடிற்று. தளராத என் புதுமைக் கொள்கைக்குத் தாதாபாய் நௌரோஜி ஊக்கம் கொடுத்தார். மிதவாதத் தலை வர்கள் என்பேரைக் கேட்டதும் மேனி நடுங்கினர். லாலா லஜபதிராய் முதலியோரின் உதவி எனக்குக் கிடைத்தது. 1907 - ஆம் ஆண்டிலே சூரத் நகரிலே காங்கிரஸ் கூடிற்று. என் கருத்தை ஏற்க மறுத் தார்கள். குழப்பம் ஏற்பட்டது. வ. உ. சி. போன்ற பெரும் வீரர்கள் என் கொள்கைக்கு ஆதரவு காட் டினர். 1908 - ஆம் ஆண்டிலே கல்கத்தா நகரிலே நான் ஆற்றிய சொற்பொழிவைக் கேட்டு மக்கள் திரண்டனர். அலட்சியமாக மக்களைப் பார்த்த ஆங்கி லேயரின் அடிவயிறு கலங்கிற்று. பொங்கி எழுந்து வரும் மக்கள் வெள்ளம் எனது நாவன்மையால் நாள் தோறும் பெருக்கெடுத்து ஓடியதே தவிர வற்றவில்லை. அனல் கக்கும் என் பேச்சைக் கேட்டு அரசாங்கமே ஆடிற்று.

வள்:— புரட்சிப் பெரும்படையைப் பூதலத்தில் கண்டுவந்த முயற்சிப் பெருந் தலைவ! உங்கள் சொல்

ஆற்றலைக் கண்டு அரசாங்கமே ஆடிற்று என்றீர்கள். போர் வீரரின் பகையைவிட சொல் வேந்தரின் பகை கேடு பயக்கும்.

வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை.

நாநலம் மக்களிலே பலருக்கு வாய்ப்பது அரிது. வாய்த்தாலும் பயன்படுத்தத் தெரிந்தவர் மிகச் சிலரே ஆவர். உங்கள் நாநலம் மிகவும் ஆற்றல் வாய்ந்தது.

நாநலம் என்னும் நலன்உடைமை அந்நலம்
யாநலத் துள்ளதூஉம் அன்று.

தில:— தமிழ்க் கொண்டலே! பஞ்சாப் படுகொலை, மாண்டேகு - செம்ஸ் போர்டு சீர்திருத்தச் சட்டங்கள் ஆகியவற்றால் அரசியல் தலைவர்களாகிய எங்களுக்குள் கருத்து மாறுபாடுகள் நிலவின. எனக்கும் காந்தியடிகளுக்கும் போர்முறையிலே வேறுபாடுகள் இருந்த போதிலும் அவரை நான் இதயத்தில் உறையும் எழிற் செல்வராகவே போற்றி வந்தேன். அவரும் நானும் உள்ளத்தால் உயர்ந்தவர்கள். உயர்வு பல வாழ்வில் உற்றோம்.

வள்:— பேராற்றல் மிகப் பெற்ற பெருமகனே. உள்ளம் உயர்ந்தால் உற்றிடலாம் வாழ்வை.

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு.

திலை:— தேன் மொழியாம் செந்தமிழைச் செவி குளிர ஊட்டி வந்த வான் தமிழ்க் கோவே! 1920 -ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31-ஆம் நாள் இரவு பயங்கர

மான சூழ்நிலைகள் பல என் கண் முன் நிழலாடின! என்னை அறியாமலேயே என் சிந்தனை சுழன்றது. உலகத்திற்கு உயர்நெறி ஊட்டிய என் தாய்த் திருநாடே! உனக்காக என் வாழ்வைத் தியாகம் செய்தும், சிறைக் கம்பிகளுக்கு இடையே சிக்குண்டு கிடந்தும் உரிமை நாடாக உன்னைக் காண முடியாமல் தவிக்கிறேன். இன்னும் சிறிது நேரத்தில் உன்னை விட்டு நான் பிரிந்து விடுவேன். அன்னையே! உன் அருமை மகனுக்கு நல்லுரை பகரமாட்டாயா? எனப் புலம்பினேன். சிறிது நேரத்துக்குள் என் ஆவி பிரிந்தது.

வள்:— திலகரே! துன்பம் பல சூழ்ந்தது. இன்பம் எனக் கொண்டு எடுத்த வினையை நிறைவேற்ற இறுதிவரை போராடினீர்கள்.

துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை.

திலகர்:— வள்ளுவரே! உங்கள் திருக்குறளில் எல்லாப் பொருள்களும் உள. இன்பப் பால் சுரக்கக் கண்டேன்; மகிழ்ந்தேன்; வணக்கம்.

வள்:— வணக்கம்.

6. வள்ளுவரும் — பட்டேலும்

வள்ளுவர் :— உறுதிக்கு ஓர் நிலைக்களமாய் வளர் புகழ் பெற்று வரும வல்லபாய் பட்டேலே! வருக! வருக!

பட்டேல் :— அரசியலின் நுட்பங்களை அழகான குறளாலே அவனிக்கு அளித்த அறிவுலக வேந்தே! வணக்கம். குறள் என்னும் தேனைக் குடிக்கமுயன் றேன். விருப்பம் நிறை வேறவில்லை. வேதனை யடைந்தேன். விண்ணுலகம் வந்தடைந்த நான் தெள் ளுதமிழ்ச் சொற்கோவாம் வள்ளுவப் பெருமானாகிய தங்களைக் கண்டதும் உள்ளம் மகிழ்கிறேன். உரைக் கின்றேன் என் வாழ்வை. ஓதிடுவீர் நும் குறளை.

வள் :— தரணி எங்கும் புகழ் நிறுவி வந்த தக்கோய்! சுகமான மலர்ப்படுக்கையைத் துச்சம் என நீக்கி, தொண்டினையே பெரிதென எண்ணி வாழ் நாள் முழுதும் வறியவரின் வாழ்க்கை உயரப் பாடு பட்ட நும் அரும்பணி அளவிடற் கரியது. அகம் திறந்து உரைசெய்க. அன்புக் குறள் தருவேன்.

பட் :— இன்ப நெறி புகட்டும் ஏந்தலே! வாழை யடி வாழையாக வாள் தாங்கிப் போரிடும் வீரப் புதல் வர்களை உண்டாக்கிவரும் கூர்ஜர நாட்டிலே கண் ணியம் மிக்க கலைவாணர்கள் வாழும் கரம்சாத் என்ற ஊரிலே 1875-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31-ஆம் நன்னாளில் பிறந்தேன். வீரவாணிலே வெற்றிக் கதிர் களைப் பரப்பிய ஜாவேரிபாய் என்பார் என் தந்தை யார் ஆவர். நான் துள்ளித் திரியும் பருவத்திலேயே கல்வி அமுதத்தை உள்ளம் நிறைய ஊட்டினார். ஊட்

டியதோடு மட்டுமல்ல; 'மகனே உன் வாழ்க்கையை நீ ஒய்யார மாளிகையிலே உலவிவரும் தென்றலாகக் கருதிவிடாதே. நாட்டு மக்களுக்கு உழைப்பதையே கடமையாகக் கொள்' என அறிவுறுத்தினர். 'உயிர் களிடத்தில் உள்ளன்பு உடையவனுக இரு. நீ அன்பை மறந்து அதிகாரப் போதை உடையவனுக ஆகி விட்டால் மனித இனத்தில் உனக்கிருந்த இடம் நீங்கி விடும். விலங்காக நீ கருதப்படுவாய்' என விளக்கம் கூறினர். அந்த விளக்கம் என் அகக் கண்ணைத் திறந்தது.

வள் :— பண்பு நெறி கொண்ட பட்டேலே! வறண்ட பாலைவன வாழ்க்கையை அன்புதான் சோலை வனமாக மாற்றும். உயிர்க்கு உடம்போடு பொருந்தி யிருக்கிற தொடர்பு அன்புடனே இணைந்து வாழும் வாழ்க்கையின் பயன் ஆகும்.

> அன்போ டியைந்த வழக்கேன்ப ஆருயிர்க்
> கேன்போ டியைந்த தோடர்பு.

அகத்துறுப் பாகிய அன்பு இல்லை என்ருல் புறத் துறுப்புக்கள் எல்லாம் பொலிவுடன் இருந்தும் பய னில்லை. உங்கள் தந்தையார் கூறியது முற்றும் பொருந்தும்.

> புறத்துறுப்பு எல்லாம் எவன்செய்யும் யாக்கை
> அகத்துறுப்பு அன்பி லவர்க்கு.

பட் :— அருமைக் குறள் தந்த பெருமைமிகு வள் ளுவரே! இளமைக் காலத்தில் ஒழுங்காகப் பள்ளிக் குச் சென்றேன். ஆசிரியர்கள் இடத்தில் பணிவுடன்

நடந்து கொண்டேன். செங்குருதி உடம்பில் தேங்கி நிற்கும் காலமல்லவா? முரட்டுத்தனம் என்னை மூத் தமிட வரும்; அரட்டைத் தேவி கையால் அணைத்துக் கொள்ள வருவாள்; கல்வியிலே கருத்தைச் செலுத்த விடாமல் கயமைத் தனத்திலே கவனத்தைச் செலுத் தச் சுற்றுப் புறத்திலே சுழன்று கொண்டிருந்த இன் பக் காட்சிகளோ எண்ணற்றன. என் மனம் என்னும் குரங்கோ அங்குமிங்கும் தாவிக் கொண்டே யிருந் தது. மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம் பொறிகளாகிய யானையை அறிவென்னும் அங்குசத் தால் அடக்கினேன். போராட்டத்தில் வெற்றி கண் டேன்; போற்றப்படும் கல்வியிலே புகழப்படும் தகுதிகள் பலவற்றையும் பெற்றேன்.

வள்:— அறிவுத் திறம் பெற்ற அண்ணலே! இக்கருத் தடங்கிய குறள் இதோ:

> உரன்என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
> வரன்என்னும் வைப்பிற்கோர் வித்து.

பட்டேல்:— கவின் ஆரும் குறள் தந்த கவிவாண! வல்லபாய் பட்டேலாக இருந்த நான் கல்வியை ஒழுங்காகப் பயின்று வழக்கறிஞர் பட்டேலாக மாறினேன். பிறகு இலண்டன் சென்றேன். பாரிஸ்டர் பட்டேலாக மாறினேன். பம்பாய்க்கு வந்து சேர்ந்தேன். வழக்கறிஞர் தொழிலை இழுக்கின்றி நடத்தினேன். எங்கும் என் புகழ் பரவியது. நெஞ்சுரம் கொண்ட நான் நீதிக்காகப் போராடத் தயங்கியதே கிடையாது. வழக்கறிஞர் தொழில் நடத்தியபோது அலங்கார ஆடைகள் என்

யாக்கைக்குப் பொலிவு தந்தன. தலையிலே தொப்பி வைத்து ஆணவப் பார்வையிலே அருகில் இருப்போரை அச்சுறுத்தி நான் வழக்கிலே வெற்றி பெறுவது உண்டு. கள்ளச் சிறுமதியால் கண்ணியத்தைக் கொல்லுகின்ற புல்லர்கட்கு அச்சத்தை உண்டாக்கி, நீதியை நிலைநாட்ட வெளித் தோற்றத்தை நான் விரும்பியது விழுமியோர் நெறிக்கு வேறானதா? வழக்குமன்றத்தில் சாட்சியளிக்க வந்திருப்போரை நான் கூர்ந்து நோக்குவது உண்டு. எனது பார்வைதரும் பாவனையைக் குறிப்பால் உணர்ந்து பொய் கூற அஞ்சுவார் பலர். குறிப் புணரும் திறம் படைத்த அவர்களை நான் போற்றியது உண்டு.

வள்:— வாய்மை நெறி தவறா வழக்கறிஞரே! வெளித் தோற்றம் வேண்டும். உலகம் அதைத்தான் விரும்புகிறது. அதுவே விழுமியோர் நெறியாகும்.

> உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
> கல்லார் அறிவிலா தார்.

குறிப்புணரும் மக்களை நீங்கள் பாராட்டியது சாலவும் பொருந்தும்.

> குறிப்பிற் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
> யாது கொடுத்தும் கொளல்.

பட்:— குறள் நெறியால் குறை போக்கும் குல விளக்கே! பேச்சால் என் போக்கை மாற்றிய பெருமகன் காந்தியடிகள் ஆவார்கள். அவர்களின் அகிம்சையை நான் அலட்சியம் செய்தது உண்டு. அது என் அறியாமையால் என்பதைப் பின்னர் உணர்ந்தேன். காந்தியடிகளும் நானும் சேர்ந்து

ஏழை உழவர்கட்காகச் சம்பரான், கெயிரா முதலிய மாவட்டங்களில் தொண்டாற்றினேம். ஆமதாபாத் நகர அவையிலே நான் ஓர் உறுப்பினனாக இருந்த போது பிளேக் நோய் பேயாட்டம் ஆடியது. அந்த நோயை விரட்டி விட இரவு பகலாக இடையறாது முயன்றேன். ஓரளவு வெற்றியும் கண்டேன். இவை அனைத்திற்கும் காரணம் காந்தியடிகளின் தொடர்பே யாகும். பெரியாராகிய அவரின் தொடர்பைப் பெற என்ன தவம் செய்தேனோ!

வள் :— நன்மை பலபுரிந்த நாவல! அன்பின் உருவாம் காந்தியடிகளின் தொடர்பைப் பெற்றேன்; பெருமை பெற்றேன் என்கிறீர்கள். பெரியவர்களை நட்பாகக் கொள்வது வல்லமை எல்லாவற்றுள்ளும் வல்லமையாகும்.

தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை.

பட்:— சாதாரணப் பட்டேலை சர்தார் பட்டேலாக ஆக்கியது பார்தோலித் தாலூகாவிலே 1927-ஆம் ஆண்டிலே நடந்த வெள்ளப் பஞ்சமே ஆகும். உலகத்தின் உயிர் நாடியாக விளங்கும் உழவர்கள், உண்ண உணவின்றி, எண்ணம் குலைந்து 'இனி வாழ்வில்லை' என ஏங்கிக் கிடந்தனர். ஆங்கிலேயர் அந்த நேரத்தில் நிலவரியை உயர்த்தினர்கள். கண்ணீர் விட்டுக் கதறி அழும் ஏழை உழவர்களிடத்தில் அதிக வரி வாங்குவது அறிவுக்குப் பொருந்தாது எனப் புரட்சி செய்தேன். மக்களின் மகத்தான ஆதரவு எனக்குக் கிடைத்தது. மாநிலமே கண்டிராத ஒரு

பெரும் சக்தி திரண்டது கண்டு மனம் கலங்கிப் போக்கை மாற்றிக் கொண்டது அரசாங்கம். வரி கொடா இயக்கம் வாகை சூடியது. நாட்டு மக்களாகிய சுற்றத்தார் தூணாகிய என்மீது தங்கள் துன்பத்தைத் துடைத்தனர். வினையையே விரும்பிய நான் இன்பத்தை ஏறிட்டும் பார்க்காது அவர்கள் துன்பத்தை என்னுடையதாக ஏற்றுக்கொண்டேன்.

வள்:— சாற்றரிய திறமைகொள் சர்தார்பட்டேலே!

இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்தூன்றும் தூண்.

பட்:— பெரியீர்! ஆங்கிலேயரின் அநீதியை எடுத்துரைத்தற்கு எங்கட்குக் கிடைத்த பரிசு சிறை வாழ்க்கையாகும். 1934 - ஆம் ஆண்டிலே சிறையை விட்டு வெளியே வந்தோம். பின்னர் சட்டசபைத் தேர்தல்கள் நடந்தன. காங்கிரஸ் போட்டியிட்டது; வெற்றி அடைந்தோம். இரண்டரை ஆண்டுகள் எங்கள் ஆட்சி சிறப்பாக நடந்தது. மந்திரிகளை அமைக்கும் பொறுப்பு என்னிடம் இருந்தது. பொறுப்புக்கு வரும் அமைச்சர்கள் புத்திசாலிகளாக இருக்கவேண்டும் என எண்ணினேன். கற்றறிந்த பெரியாராகவும் ஆட்சித் திறமை யுடையவராகவும் இருந்தவர்களையே அமைச்சராகத் தேர்ந்தெடுத்தேன்.

வள்:— ஆட்சித் திறம் பெற்றீர்! தகுதியுடையவரையே அமைச்சராக ஆக்கினேன் எனக் கூறினீர்கள். அமைச்சர்க்குரிய இலக்கணம் அமைந்தோரையே அப் பதவிக்கு அமைத்தல் வேண்டும்.

வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ
டைந்துடன் மாண்டது அமைச்சு.

பட்:— *இந்தியாவில் 550-க்கு மேற்பட்ட சமஸ்தானங்கள் இருந்தன. ஆங்கில அரசினர் இந்தியாவைச் சிறுசிறு பிரிவாகப் பிரித்து வேற்றுமைக் கந்தலாக்கினர். பல்வேறு வகையாக நாடு பிரிந்தால் உண்மையான வளர்ச்சி இருக்காதே என எண்ணினேன். ஒன்றுசேர்க்க முயன்றேன். என் முயற்சிக்கு ஆதரவு கிடைத்தது. மெய்வருத்தம் பாராது மேலும் மேலும் முயன்று தனியரசுகளை என் தாயகத்துடன் சேர்த்தேன்.*

வள்:— *வயிர நெஞ்சம் படைத்த வல்லபாய் பட்டேலே! அருமையான செயலினைச் செய்து பெருமை பெற்றீர்கள்.*

அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

பட்:— *காங்கிரஸ் மந்திரிசபை ஆட்சியில் இருக்கும் பொழுது இரண்டாவது உலகப் போருக்கு ஆங்கிலேயர் எங்கள் அனுமதியின்றி இந்தியாவைப் போரில் ஈடுபடுத்தினர். இதைக் கண்டு ஆத்திரம் கொண்டு மந்திரிசபையை விட்டு வெளியேறினோம். உண்ணுவிரதம் மேற்கொண்டோம். 1940-இல் அதன்விளைவாக சிறை சென்றோம். 1942-இல் ஆகஸ்ட் புரட்சி மிகத் தீவிரமாக நடந்தது. நாடெங்கும் மக்கள் மனம் கொதித்தனர். ஆங்கிலேயரின் ஆணவம் பறந்தது. சிம்லாவில் இந்தியத் தலைவர்களும் ஆங்கில அரசின் பிரதிநிதிகளும் கூடிப் பேசினர். 1947-ஆம் ஆண்டு*

ஆகஸ்டுத் திங்கள் 15 - ஆம் நாள் இந்தியா உரிமை பெற்றது.

வள்:— மனத்திட்பம் கொண்ட மாவீரரே! வினை ஆற்றும் தங்கள் திறமையை மேதினி நன்கு அறியும்.

> வினைத்திட்பம் என்ப தொருவன் மனத்திட்பம்
> மற்றைய எல்லாம் பிற.

1950 - ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15 - ம் நாள் தங்கள் கண்கள் மூடின. அகக் கண்ணால் கண்டேன். தாங்கள் விட்டு வந்த உரிமைத் திருநாட்டை உத்தமர்கள் போற்றி வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். உள்ளத்தில் உவகை கொள்ளுங்கள்.

பட்:— பெரியீர்! தங்கள் திருவாயால் குறள் கேட்டு மகிழ்ந்தேன். நன்றி, சென்று வருகிறேன். வணக்கம்.

வள்:— வணக்கம்.

---

7. வள்ளுவரும்—பண்டித மணியும்

பண்டித மணி:— தெள்ளு தமிழில் திருக்குறளாம் நூல் தந்த வள்ளுவப் பெருமானே! வணங்குகிறேன். உலகத்தில் நான் உலவிய நாளில் ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங் குறளிலும் அனைத்தையும் அளந்து கூறியிருக்கும் தங்களது பெருமையை நினைக்காத நேரமில்லை. திருக்குறள் மணக்கும் தங்கள் தெய்வத் திரு உடலைக் காணவேண்டும்; கண்டு உரையாட வேண்டு மென்றெல்லாம் எண்ணங்கள் எழுந்தன. மண்ணகத்தே எழுந்த அவ்வெண்ணங்கள் விண்ணகத்தே நிறைவேறுவன குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

வள்ளுவர்:— சிதையாத செந்நெறியில் செந்தமிழைக் காத்துவந்த கதிரேச! தங்களைக் காணும் வாய்ப்புக் கிட்டியமை குறித்து மட்டிலா மகிழ்ச்சியடைகிறேன். செழித்து வளரும் செந்தமிழ்க்கு உயிர்த்துணையாய் இருந்த உத்தமர்கள் ஒருவர்பின் ஒருவராய் மண்ணீத்து விண் புகுவது குறித்து வேதனையடைகிறேன்.

பண்:— அன்புத் திருவுருவே! அறத்தின் பிறப்பிடமே! வானக் கதிரே! வாய்மைக் குறள் தந்த தூய்மை வடிவே! நல் வாழ்வு கூறுகிறேன். ஒல்லும் வகையால் ஓதிடுக குறட்பாவை. மங்காத தமிழ்ப் புலமை தங்கிவரும் மாநகராம் மகிபாலன்பட்டியிலே 16–9–1881-இல் பிறந்தேன். தேக்குமரம் கடைந்து செய்ததொரு தொட்டிலிலே ஈக்கள் நுழையாமல் இட்டதிரை நடுவில் எனை யீன்றவர் பாடிய தாலாட்டுத் தமிழைக் கேட்டேன். சித்திரத் தேரும் சிறுபறையும் கொண்டு, அச் சிற்று

ரின் தெருவிலே நான் விளையாடும் பொழுது, கொவ்வை இதழ் மலரக் கோல உருவில் வெளிவரும் அவர்தம் இன்னுரைகளைக் கேட்டேன். கன்னலிலே சாறெடுத்துக் கன்னித் தமிழ் குழைத்துக் கனி இதழால் பரிமாறும் அவர்தம் செந்தமிழைச் செவிமடுத்தேன். படிப்படியாக மொழி மீது நான் கொண்ட மோகம் முற்றிவிட்டது.

தமிழ் பாடும் புலவர்கள் உலவும் இடமெல்லாம் நாடிச் சென்றேன். அந்த நல்லவர்கள் கூறிய உரைகளை எல்லாம் ஆரா வேட்கையினால் அள்ளி அருந்தினேன். வானை நிலவு மறப்பினும் வான்மழையைப் பயிர் மறப்பினும் தேனை வண்டு மறப்பினும் என் செந்தமிழை நான் மறக்கமுடியாது என்ற நிலை உண்டாயிற்று. எனவே தமிழைத் துறை தோறும் கற்றுத் திறமாக வேண்டுமென்று புலவர்களை எல்லாம் தேடினேன்; அவர்தம் முதல் மாணவராக வேண்டுமென்று முயன்றேன். சோழவந்தான் அரசன் சண்முகனிடத்துச் செந்தமிழையும், சொக்கலிங்க ஐயா விடத்துச் சித்தாந்த வரம்பையும் தெளிவுறக் கற்றேன். தெரிமாண் தமிழ் மொழியில் சிறந்த புலமை பெற்றேன். துடிக்கும் இளமைப் பருவத்தில் எத்தனையோ கேளிக்கைகள் என்னைத் தொட்டிழுத்தன. இரவும் பகலும் ஓயாது உழைத்து இன்பம் கண்டு அந்தப் பூரிப்பிலே புரள வேண்டுமென்று நான் எண்ணவில்லை. மொழி உயர்ந்தால் என்ன? தாழ்ந்தாலென்ன? நமது வாழ்வு வழி உயர்ந்தால் போதும் என்ற சுயநலத்திலே நான் சுழலவில்லை. கற்கண்டுப் பாகும் கனிரசத் தேனும் கூட

எனக்கந்தப் பருவத்திலே கசந்ததென்று கூடக் கூறலாம். என் வாழ்விலே இரண்டறக் கலந்து சுவை காட்டி இனித்தது கன்னித் தமிழ்க் கல்வியே யாகும்.

வள்:— கோல மொழியால் என்னைக் குளிர்வித்த ஞாலம் புகழும் நற்பண்டிதரே! தங்களின் மங்காத கல்வியும் மாறாத மொழிப்பற்றும் கண்டு நான் மகிழ் கின்றேன். பொருள் உங்களுக்குப் போக வாழ்வைக் காட்டி யழைத்தது. ஆனால் அதை இருள் நிறைந்த பாதை என்று எடுத்தெறிந்து விட்டீர்கள். சிந்தையைக் கவரும் எத்தனையோ வையத்து விந்தைகள் உங்களைக் கைகாட்டி அழைத்தன. அவைகள் அனைத்தையும் நிந்தை மொழியால் வெறுத்துக் கல்வி ஒன்றையே நீள நினைத்தீர்கள். வெள்ளத்தால், வெந்தழலால், கள்வ ரால் அழியும் பொருளை வெறுத்தீர்கள்; அழியாப் பொருளை எடுத்தீர்கள்.

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்ற யவை.

பண்:— அமுதக் குறளை அகம் குளிர ஊட்டி வரும் இனிமைப் பெரியோய்! எழில் தமிழின் காவலரே! வாழும் நாளிலே வளர் தமிழ்க்கோர் நிலையான தொண்டு செய்ய வேண்டுமென்று என் உள்ளம் துடிதுடித்தது. திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளும் குன்றம் எறிந்த குமரவேளும் மால் வரை தூக்கிய மணிவண்ணனும் சங்கத்திருந்து ஆய்ந்த சாவா மூவாத் தமிழுக்கு ஓர் ஆலயம் நாட்ட வேண் டுமென்று என் அறிவு கேட்டுக் கொண்டது. நாடு எல்லாம் ஊரெல்லாம் நல்லவர் தம் வீடெல்லாம்

சென்றேன். பாராண்ட தமிழ், இளமைக்குப் பால் வார்த்த தமிழ் இன்று பார்ப்பவர் அற்றுக் கிடக்கும் நிலையை எடுத்துக் கூறினேன். 'மெல்லத் தமிழினிச் சாகும்; அந்த மேலை மொழிகள் புவிமிசை யோங்கும்' என்ற பேதையரின் பித்தேறிய உரைகளை எல்லாம் செந்தமிழ் நாட்டார் சித்தமேற எடுத்துச் செப்பினேன். நல்ல தமிழ் வளர்க்கும் நாட்டுக் கோட்டைச் சீமையிலே என்னுரை பரந்து புகுந்தது. உறங்கிய வாழ்விலே விழிப்புணர்ச்சி தோன்றியது. அதன் பயனாக மேலைச்சிவபுரியில் தமிழ் வளர்க்கும் சன் மார்க்க சபை ஒன்று தோன்றி வித்தாகிச் செடியாகி விழுதூன்றித் தழைக்கும் ஆலாய் வளர்ந்து அரும் புலவர் பலரைக் காத்து வருகின்றது.

வள்:— கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழியும் வித்தகரே! பண்டிதர்க்குப் பண்டிதரே! ஈசல் எனத் தோன்றி நீச வாழ்வு வாழ்ந்து மடியும் மாந்தர் நிறைந்த மாநிலத்தில் மறையாத தொண்டொன்றைச் செய்தீர்கள்; தங்கள் போன்றவர்களால்தான் இத்தகைய செயலை ஆற்ற முடியும். ஒவ்வொரு செயலையும் தகுதியுடையவர் செய்ய வேண்டும்.

> **இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து**
> **அதனை அவன்கண் விடல்.**

பண்:— வாழ்வைக் குறளாக்கி வளர் தமிழ்க்குச் சீர்தந்த வள்ளுவரே! தென்னகத்தின் ஒளி விளக்கே! தென் பாண்டிக் கடல் முத்தே! இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுந்த முழக்கங்களுள் 'சென்

றிடுவீர் எட்டுத் திக்கும்! கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!' என்ற அமரகவி பாரதியின் உரை என் செவி வழிப் புகுந்து சித்தத்தை ஈர்த்தது. வடமொழி இலக்கியங்களைத் தமிழிலே பெயர்க்கும் தொண்டிலே ஈடுபட்டேன். சுக்கிர நீதி, மிருச்ச கடிகம், மண்ணியல், சிறுதேர் என்ற நூல்களை மொழி பெயர்த்துத் தமிழன்னையின் திருவடிகட்குப் பாத காணிக்கையாக்கினேன். இரு மொழிப் புலமை வாய்ந்த எனக்குப் பண்டித மணி என்ற பட்டத்தை அறிஞர்கள் வழங்கினார்கள். உலகக் கண்ணோட்டத்தை எல்லாம் சுண்டி இழுக்கும் உலக வரலாற்றுக் களஞ்சியத்திலே எனக்கும் ஓர் இடம் தேடிக் கொண்டேன். அதனால் அருந்தமிழ்க்கும் ஓர் பெருமை தந்தேன்.

வள்:— உடலாலும் உள்ளத்தாலும் உயிராலும் நாட்டை நலமாக்கி வந்த உரவோய்! தமிழ்க்குக் 'கதி' என்று கம்பனையும் என்னையுமே பண்டு தொட்டுப் பரவி வந்தனர். இந்த நூற்றாண்டிலே இந்த இரு எழுத்திலே இன்னும் இரண்டு உருவங்கள் வந்து கலந்து கொண்டதைக் காணுகின்றேன். தமிழ்க்குக் கதி என்றால் 'தி' என்னும் எழுத்து தென்றல் நடை போட்டுத் தென்னகத்தில் அறிவுப் பரணி பாடி வந்த அறிஞர், தொழிலாளர் தோழர், மாசற்ற பெரியார் திரு. வி. க. அவர்களைக் குறிக்கும். 'க' என்னும் எழுத்து காவியத்தோடு இரண்டறக் கலந்து நிற்கும் கதிரேசனாகிய தங்களையே குறிக்கும். உலக வரலாற்றில் தங்களுக்குரிய இடம் தேடிக் கொண்டு அடைய வேண்டிய புகழை அடைந்து விட்டீர்கள்.

தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று.

பண்டித:— பாரோர் போற்றும் பாவலரே! முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளாய்ப் பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் புதுமையதாய்த் தென்னாட்டின் பொன்னேடாம் திருக்குறளைத் தந்த தேவே! தமிழ்ப்புரவலர், கலைத்தந்தை, கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்கள் எனக்கு உதவி பல புரிந்து, என் மொழிப்பற்று வளரப் பேராதரவு காட்டினார்கள்.

வள் :— தென்றமிழ் மணியே! உதவி செய்தாரைப் பாராட்டும் தங்கள் உள்ளப் பண்பாடு கண்டு உவகை உறுகிறேன்.

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு

என்ற குறள் கலைத்தந்தையார் வாழ்வுக்கு ஓர் எடுத்துக் காட்டு ஆகும்.

பண்டித:— குறளமுதை அள்ளித் தருகின்ற அறிஞர் பெருமானே! என் ஆன்றவிந்தடங்கிய புலமையினாலே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக நியமிக்கப் பெற்றேன். ஆங்கிலப் பள்ளியின் நிழலைக் கூடக் காணாத நான் கல்லூரியில் பெரும்பதவி பெற்றேன்; பெற்ற பதவியைப் பேணிக் காத்தேன். வண்ணமலர் நாடிச் செல்லும் வண்டுக்கூட்டம் போல மாணவர் குழாம் என்னைச் சூழ்ந்து தமிழ்த்தேன் மாந்தி நிற்கும். அமரவாழ்வு பெற்ற சங்க இலக்கியத்தின் ஐயங்களை நீக்கிக் கொள்ள ஆசிரியர் குழாம் என்

னைச் சூழ்ந்து கொள்ளும். நான் பெற்ற தமிழ்ச் செல்வத்தை, தங்கக் குவியலை, கவிதைக் கனிகளை, இலக்கிய நயத்தை, இலக்கண வரம்பை வந்தோர்க்கெல்லாம் வாரி வாரி வழங்கினேன்.

வள்:— வற்றாது வழங்கிய வள்ளலே! சிந்தை எனும் தினைப்புனத்தில் அறியாமை எனும் பறவைகள் வந்து குந்திய போதெல்லாம் அறிவுத் தெளிவு என்னும் ஆலோலம்பாடி நல்லறிவை நாட்டிற்குக் காட்டினீர்கள். செல்வத்துப் பயன் ஈதலே யாகும். தாங்கள் பெற்ற கல்விச் செல்வத்தை மாணவர்க்கும், மாசகற்றும் ஆசிரியர்கட்கும் அள்ளிக் கொடுத்தீர்கள். அழியாப் புகழ் பெற்றீர்கள். உயிர் பெற்ற பயனை, அதன் ஊதியத்தை அடைந்தீர்கள்.

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல
ஊதிய மில்லை உயிர்க்கு.

பண்டித :— பொதியமலைத் தென்றலெனப் பொன்னான குறள் தந்த புரட்சிப் புலவரே! பொய்கைப் புது மலரே! செய்கைத் திறல் வேந்தே! ஊருக்கு ஒரே கிணறு. மக்களெல்லாம் உண்ணும் நீருக்கு அதைத் தான் நம்பி இருக்கின்றனர். கிணறோ ஆழமும், அகலமும், வனப்பும் பெற்று இருக்கிறது. ஆனல், அக் கிணற்றிலோ ஊற்றில்லை. வானுற ஓங்கி, வளம் பெற வளர்ந்து, வருவோர் போவோர்க் கெல்லாம் நிழல் தரவேண்டுமென்ற ஆசையினுல் அங்கே நடப்படும் நல்மரம் வளர்ச்சியடையுமா? கடலைக் கலக்கும் வன்மை; மலையை இடிக்கும் தோள்; கட்டமைந்த உடல் - இத்தகைய உடலமைந்த வீரனெருவன் கையிலே கடகமின்னப் போர்க் கோலம் பூண்டு புரவிமீதே

றிப் போர்க்களம் புகுகின்ருன். அந்த வீரனுக்கு விழி பழுது. பயன் என்ன? இத்தகைய சூழ்நிலையிலே நாம் என்ன பயனை எதிர்பார்ப்போமோ அதே பயனைத்தான் காணமுடியும் சமய நம்பிக்கை இல்லாத வாழ்க்கையிலும். ஆகவே, மொழியுடன் சமய நம்பிக்கைக்காகவும் பாடுபட்டேன். ஆதிசீர் பரவும் வாதவூரண்ணல் மலர்வாய்ப் பிறந்த திருவாசகத் தேனுக்கு உரை ஒன்று எழுதினேன்.

வள் :— செய்யும் தொழிலைச் சிறக்கச் செய்கின்ற செந்தமிழின் புலவ!

கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்ருள் தொழாஅ ரெனின்

என்ற என் குறளைத் தெளிவாக்கிய கொற்றவ! தாங்கள் எழுதிய திருவாசக உரை முற்றுமுடியு முன்னரே மண்ணீந்து விண்புகுந்தது குறித்து வேதனையடைகிறேன்.

பண்டித :— நான் எழுதிய திருவாசக உரைக்கு மதிப்புரை பெற மணிவாசகப் பெருந்தகையிடத்திலும், முன்னுரை பெற முக்கட் பெருமானிடத்திலும், வாழ்த்துரை பெறத் தங்களிடத்திலும் வந்திருக்கிறேன். தாய்மொழியை மறக்கவில்லை; தாய்நாட்டைத் துறக்கவில்லை.

வள் :— சிந்தித்துச் செயலாற்றும் செயல் வீர! தாங்கள் சிந்தித்து வந்த செயல் சிறந்த தொன்று. மகிழ்ச்சி.

பண்டித :— நன்றி; விடைபெறுகிறேன். வணக்கம்.

வள் :— வணக்கம்.

8 வள்ளுவரும் - பாரதியும்

(விண்ணுலகம் - வள்ளுவர் மனை. வள்ளுவரும் மற்றைப் புலவர்களும் அமர்ந்திருக்கின்றனர். வள்ளுவர் உயர்ந்த வாழ்வு முறைகளை எடுத்துக் கூறிக்கொண்டிருக்கிறார். வாயிற் காவலன் வந்து நிற்கிறான்)

வா. கா :— செந்நாப் புலவரே! செந்தமிழின் உயிரே! வணக்கம். கருத்த மேலங்கியோடு கவினார்ந்த உருவோடு, கதிர்வீசும் கண்களோடு தங்களைக் காண வேண்டும் என்று ஒருவர் வருகிறார். காட்டாற்று வெள்ளம் போல் கவிதை மழை பொழிகிறார். செய்தியைத் தெரிவிக்கவே திருமுன் வந்தேன்.

வள் :— (எழுந்து நடந்து கொண்டே) அப்படியா? இனிக்கும் சிலம்பு தந்த இளங்கோவே? ஒலிக்கும் மேகலை தந்த சாத்தனாரே! கவிதை மழை பொழியும் கபிலரே! பைந்தமிழ் பாடும் பரணரே! திருமுறை பாடிய சைவப் பெரியோரே! திவ்வியப் பிரபந்தம் பாடிய ஆழ்வாராதிகளே! மற்றைய பாவலரே! நாவலரே! அமரகவி வருகின்றார்; பொங்கும் தமிழிலே புதுமை புகுத்திய புகழ்வீரர் வருகிறார்; மறையாத ஓவியத்தைக் கலையாத காவியத்தைப் பாடிய கவிவாணர் வருகின்றார். பைந்தமிழகத்தே நமது பரம்பரையைக் காத்த பாவலர், 'பாட்டுக்கொரு புலவன்' பாரதி வருகின்றார். ஊதுமினோ சங்கம்! ஒலியுமினோ வாழ்த்தொலிகள்!!

(பாரதியும் நெருங்கி வந்துகொண்டிருக்கிறார்; வள்ளுவரைக் கண்டவுடன் ஓடோடியும் வந்து திருவடிகளில் விழுந்து கட்டிப் பிடித்துக் கொண்டு)

பாரதி:— என்னுயிர் கவர்ந்த உத்தமரே! உலகப் பொது நூல் தந்த வள்ளுவப் பெருமானே! ஒளியாய், ஒலியாய் என் உளமெல்லாம் நிறைந்து நிற்கும் உயர் ஞானப் பிழம்பே! தங்களைக் காணக் கொடுத்து வைத்த என் கண் பெற்ற பயனே பயன்! காரிருளை நீக்கிக் கருணைஒளி காட்டும் அமுத நிலவே! தாங்கள் பிறந்த கன்னித் தமிழகத்தே நானும் பிறந்தேன். தங்கள் திருவடிபட்ட இடங்களிலெல்லாம் நானும் உலவி வந்தேன். இந்தப் பெருமையால் பீடுற்று நின்றேன். வறுமையால் வாடினேன்; தங்கள் வாய் மொழி மறக்கவில்லை; துன்பத்தால் துவண்டேன்; தங்கள் துயர்நீக்கும் குறளைத் துறக்கவில்லை. தங்கள் குறள் கொடுத்த திடத்தால் "இன்னல் வந்திடும் போததற்கு அஞ்சிடோம் ஏழையராக இனி மண்ணிற் துஞ்சிடோம்" என முழங்கினேன். "வள்ளுவரும் அவர் தம் வாய்மொழியும் பிறந்த நிலத்திற்கு வையத்து மற்றெந்த நிலமும் ஈடில்லை" எனக் கவிபாடினேன். ஆனால் அந்தோ! நான் பெற்ற பயன்... எனக்குக் கிடைத்த பரிசு....

வள்:— எழுச்சிக் கனலை எழிற் கவிதையாக்கிய கவிஞ! கவலற்க! இன்பத் திருநாட்டின் சிறப்புக்காக உழைத்த அத்தனை பேருக்கும் நாடு முதலில் தந்த பரிசு அந்தத் துன்பச் சுழல்கள்தாம். தங்களின் தமிழ்த் தொண்டை, நாட்டுப் பணியைக் கண்டு வாழ்த்த வேண்டிய திருநாடு வசைமாரிதான் தந்திருக்குமென நினைக்கிறேன். தங்கள் வாழ்வைக் கூறினால் நாட்டு நடப்பை யறிந்துகொள்ள நலமாயிருக்கும்.

பாரதி:— கூறுகிறேன் பெருமானே! நெஞ்சத்தில் குடியேறிச் சுமை சுமையாய் எனை வருத்தும் குறைகள் நீங்கக் கூறுகிறேன். வாழ்விற்கு இலக்கணம் வகுத்த தங்களிடத்து என் வாழ்வைக் கூறாது வேறு யாரிடத்தில் கூறப்போகிறேன். நெஞ்சை அள்ளும் செஞ்சொற் காவியம் தந்த அரசத் துறவி இளங்கோவே! புகழுடம்பு தாங்கிய கம்பரே! தமிழ்ப் பேரவையை நிறைவிக்கும் புலவர் பெருமக்களே! அத்தனை பேரும் கேளுங்கள். உள்ளத்தை உறுதியாக்கிக் கண்ணீரை வற்றச் செய்து கேளுங்கள். பிறந்த கதையை, வளர்ந்த கதையை, வாழ்ந்த கதையைக் கூறுகிறேன். சொற் குற்றம் நிறைந்திருக்கும், பொருட் குற்றம் மிகுந்திருக்கும்; அப்பிழை பொறுக்க வேண்டுகிறேன்.

பெரியீர்! பொருநை பாயும் திருநெல்வேலி மாவட்டத்தில் எட்டயபுரம் என்னும் ஊரில் 1882-இல் பிறந்தேன். எனது தந்தை பெயர் சின்னசாமி; ஈன்ற தாயின் பெயர் இலக்குமி அம்மாள். நான் பிறந்த சிறிது காலத்திற்குள், அதாவது எனது நீலத் திருவிழிகள் ஆளை அடையாளங் கண்டு அவர்கள் மீது நேசநாக்குச் செலுத்தத் தெரியாத காலத்தே, எனக்குப் பாலூட்டித் தாலாட்டித் தமிழூட்டி வளர்க்க வேண்டிய தாயை இழந்தேன். தாயை இழந்த சேய் என்ற காரணத்தால் தந்தையின் அன்பு என்மீது அதிகமாயிற்று.

என் தந்தைக்கு மேனாட்டுப் பொறிகள் மீது அளவு கடந்த ஆவல். என்னையும் பொறியியல் துறையில்

பழக்கி அதில் அறிஞனாக்கி, அதன் மூலமாகச் செல்வத்தைப் பொன்மலை போல் குவிக்கவேண்டுமென்று கனவு காண்பவர். ஆங்கிலப் படிப்பிற்காக அயல் நாட்டிற்கனுப்பி அங்கிருந்து திரும்பும் பொழுது நாடாளும் தகுதியும், பதவியும் பெற்று வரவேண்டு மென்று, எட்டாத பேராசைக் கோட்டை கட்டுவார். ஆனால் கணிதத் துறையிலோ அன்றி ஆங்கிலத் துறையிலோ என் அறிவு செல்லவில்லை. என் எண்ணங்கள் எல்லாம் அருந் தமிழ் மொழியிலே, அமுதக் கவியிலேதான் சென்றன. கவிதை புனையும் வன்மை எனக்கு இடைஇடையே இருந்தது. எனது ஆற்றலை அறிந்த எட்டயபுர மன்னர் என்மீது ஆர்வம் காட்டினார். மன்னரின் மனப்போக்கு அறிந்த சமஸ்தான வித்துவான்களும் என்மீது அன்புகொண்டு "பாரதி" என்னும் பட்டத்தை வழங்கினர்.

எட்டயபுர மன்னர் சிங்கார ரசத்தையும் அது குறித்து எழும் கவிதைகளையும் மிகுதியாக விரும்பிய காரணத்தால் அவரோடு தொடர்பு கொள்ள என் மனம் மறுத்தது. கங்கை பாயும் காசிமா நகரத்திற்கு என் அத்தை வீட்டிற்குச் சென்றேன். அங்கேயும் பள்ளிக்குச் சென்றேன். பள்ளியில் பாடம் படிப்பதில்லை; பாடல்கள் எழுதினேன்; புத்தகம் கொண்டு செல்வதில்லை; சித்த மெலாம் தித்திக்கச் செய்யுள் எழுதலாம் என வெற்றுத் தாள்கள் மட்டும் கொண்டு செல்வேன்; இருந்தாலும் தேர்விலே வெற்றி பெற்றேன். அரசியல் மொழியாக ஆங்கிலம் படித்தேன். வடமொழியையும் ஆழ்ந்துணர்ந்தேன். பின்னர் நண்பர்களின் கூட்டுறவால் வங்காள மொழி

யையும் பேசப் பயின்றேன். மீண்டும் எட்டயபுர மன்னர் அழைப்பை ஏற்று, கங்கையையும் காசியையும் மறந்து பிறந்த நாட்டை நோக்கிப் புறப்பட்டு வந்தேன்.

வள்:— கவிக்குயிலே! கருணைமுகிலே! தங்களின் தருந்த அறிவு கண்டு மிகுந்த மகிழ்ச்சி யடைகிறேன். இளமையிலேயே எத்தனையோ மொழிகளைக் கற்றறிந்தீர்கள். இயற்கையில் மாந்தர்க்குள்ள அறிவை நூல்களைக் கற்பதன் வாயிலாக மிகுதிப் படுத்திக் கொள்ளலாம். மணற்கேணியைத் தோண்டத் தோண்டத்தான் நீர் கிடைக்கும். மன அறிவும் படிக்கப் படிக்கத்தான் மிகுதியாகும். தமிழ், ஆங்கிலம், வடமொழி, இந்தி, வங்காளி முதலிய எத்தனையோ மொழிகளில் தாங்கள் தேர்ச்சி பெற்றீர்கள். எத்தனையோ நூல்களைப் படித்தீர்கள். எத்தனையோ மக்களுடன் பழகினீர்கள். தோண்டத் தோண்ட நீர் சுரக்கும் மணற் கேணியை ஒப்ப மன அறிவு வாய்க்கப் பெற்றீர்கள். சிலர் நூலறிவும் நுண்ணறிவும் ஒருசிறிது மின்றிப் புலவரெனத் திகழ்வதைக் காண்கிறோம். அரங்கு இன்றி வட்டாடுதலைப்போல கல்வி கேள்வி இன்றிக் கற்றோருடன் வாதிடுவதையும் காணுகின்றோம். தாங்களோ நூலறிவும் நுண்ணறிவும் வாய்க்கப் பெற்றுப் பன்மொழிப் புலவராகத் திகழ்ந்தீர்கள்.

> தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
> கற்றனைத் தூறும் அறிவு.

> அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
> நூலின்றிக் கோட்டி கொளல்.

பாரதி:— பொய்யா மொழிப் புலவ! பூரித்தேன் குறள் கேட்டு! எட்டயபுரத்திலிருந்து திரும்பி வந்த எனக்கு நீண்ட காலம் அங்கு இருக்க முடியவில்லை. விரைவில் எட்டயபுர வாழ்க்கையைத் துறந்தேன், தண்ணார் தமிழ் அளிக்கும் தன் பாண்டி நாட்டில் மதுரை மாநகரில் சேதுபதி உயர் நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக அமர்ந்தேன். கற்றது உணர விரித்துரைத்தேன். ஆனால் அப்பதவியும் எனக்குப் பிடிக்காத காரணத்தால் சென்னைமா நகரத்திலிருந்து வந்து கொண்டிருந்த சுதேசமித்திரன் நாளிதழ்க்குச் சென்று பத்திரிகைத் தொழிலை மேற் கொண்டேன். அப்பொழுது திலகரின் தீவிரக் கொள்கைகளை ஆதரித்து நான் சுதேச மித்திரனில் எழுதினேன். சுதேச மித்திரன் உரிமையாளர்க்கு அது பிடிக்காத காரணத்தால் அதை விட்டு விலகினேன். விலகிய நான் சோர்ந்துவிடவில்லை. அபாயக்குறியைக் காட்டும் சிவப்புத் தாளில் 'இந்தியா' என்னும் இதழை நடத்தினேன். 1907-இல் சூரத்தில் காங்கிரஸ் மகாசபை கூடியது. அதற்குச் சென்று திரும்பிய நான் எனது 'இந்தியா' என்னும் நாளிதழில் திலகரின் தீவிரக் கொள்கைகளை எதிர்த்துக் கட்டுரை எழுதினேன்.

இந்தச் சமயத்தில்தான் திலகருக்கு ஆறுண்டு கடுங் காவல் தண்டனை கிடைத்தது. தீவிர இயக்கத்தில் தொடர்பு கொண்ட பெரிய மனிதர்களை எல்லாம் அரசியலார் சிறைப்படுத்திக் கொண்டே இருந்தனர். 'இந்தியா' பத்திரிகையை வெளியிட்டோர் மேலும் அவ் வம்பு பாய்ந்தது. அதே அடக்கு முறை, சிறைவாசம்

எனக்கும் கிடைக்கும் என நண்பர்கள் பலர் அறிவுறுத்தினர். பெரியோர்கள் பலர் புதுச்சேரியில் சென்று வாழுமாறு வற்புறுத்தினர். ஆகவே சென்னையைத் துறந்து புதுவையிலே எனது வாழ்க்கையை நடத்தினேன். புதியதோர் நகரில் கையிலோர் காசுமின்றிக் கடன் கொடுப்பார் யாருமின்றி நான் பட்டபாடு சொல்ல இயலாது. அந்த நிலையிலும் 'இந்தியா'வைத் தளர்வின்றி நடத்தினேன். "என்று தணியும் இந்தச் சுதந்திரத் தாகம், என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்" என்று நான் எழுதிய பாடலை, நெஞ்சக் குமுறலை 'இந்தியா'வில் வெளியிட்டேன். அரசினர் தீப்பொறி பறக்கும் அப்பாடலைக் கண்டனர். அரசுக்கு அடிபணியும் சிலர் அச்சக் கண்களோடு அப்பாடலைப் பார்த்தனர். அக் கருத்தை ஏற்கக்கூடிய மக்கள் அதிகமில்லாத காலமாதலால் 'இந்தியா' இதழுக்குத் தடை விதிக்கப்பட்டது. கள்ளத்தனமாக வெளியிட்டேன். அதுவும் நீண்ட நாள் நிலைக்கவில்லை. இவ்வாறு நான் எடுத்த முயற்சி தோற்றது. ஆனால் நான் கூறிய கருத்து நிலைத்து நின்றது.

வள் :— அறிவின் ஒளியை, உரிமைத் திருவை அவனிக்குக் காட்டிய அறிஞரே! தங்களுடைய ஊக்கத்திறனை, உள்ள உரத்தைக் கண்டு பாராட்டுகிறேன். எத்தனையோ இடையூறுகள் குறுக்கிட்ட போதிலும் 'இந்தியா' எனும் நாளிதழைத் தவறாது நடத்தி வந்தீர்கள். பொதுப்பணியில் புகுவோர்க்கு இது போன்ற இடையூறுகள் வருவது இயற்கை. சிலர் இடையூறுகளைக் கண்டு அஞ்சி ஊக்கத்தைக் கைவிட்டுச்

சிறந்த செயலுக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்து விடுவார்கள். புதுவை நகர்க்குத் தாங்கள் சென்ற பொழுது பணமோ, பக்கத் துணையோ இன்றிச் சென்றீர்கள். ஒருவர்க்கு உண்மையான செல்வம் ஊக்கந்தான். ஆக்கமும் ஊக்கமுடையாரின் அடியின் கீழ் வந்து ஒதுங்கும். ஊக்கமில்லாதவரிடத்து ஆக்கமிருப்பினும் அவ்வாக்கத்தால் பயனில்லை. அவர்களும் மரங்களாகவே கருதப் படுவர்.

உரமொருவற் குள்ள வெறுக்கை அஃதிலார்
மரமக்க ளாதலே வேறு.

பாரதி:— அயற்சிதனைப் போக்கி முயற்சிதனைத் தந்த அறிஞரே! சுதேசிகள் என்ற முத்திரையோடு புதுவை நகரிலே நான் வாழ்ந்து வருங்கால் விதவிதமான இன்னல்கள் என்னை அணுகின. இறைவன் திருவருளால் இயற்கையிலேயே எனக்குக் கவிபாடும் வாய்ப்புக கிடைத்தது. உணர்வுக்கும் உணர்ச்சிக்கும் என் உள்ளம் இடம் கொடுத்தது. ஆகையால் என்னுடு பொன்னுடு என்பதை அறிந்தேன். அதில் மாற்றாரின் ஆட்சியா என வெகுண்டெழுந்தேன். என் கவிதையிலே புதுமை இருந்தது; நடையிலே உணர்ச்சி இருந்தது. நான் இயற்கையைப் பாடினேன்; கபிலனும் பரணனும் கம்பனும் இளங்கோவும் பாடிய, பிறகு அந்த இயற்கையைப் புது நடையில் பாடினேன்! கடவுளைப் பாடினேன்! திருமுறைகளும் திவ்வியப் பிரபந்தங்களும் வேதாந்தப் பாடல்களும் சிந்தாந்த நூல்களும் எழுந்த பிறகு பாடினேன். ஆகவே எனது இயற்கைப் பாட்டுக்களையும் இறை

வன் பாட்டுக்களையும் விட மக்களின் உள்ளத்தை ஈர்த்தவை என் நாட்டுப் பாடல்களே யாகும். அரசியலார் கவனத்தைக் கவர்ந்தனவும் அவைகளே. நானோ பணமில்லாதவன்! பணம் படைத்தோர் குணமின்றி இருப்பின் அவர் தம் தொடர்பையும் விரும்பாதவன். எவரேனும் எனக்கு மனமிரங்கி அனுப்பும் பணத்தையும் அரசியலார் தடை செய்து விட்டனர். தூத்துக்குடியில் ஆஷ் என்ற துரைமகன் ஒருவன் சுட்டுக் கொல்லப்பட்டான். அவன் கொலைக்கும் எங்களுக்கும் தொடர்பிருப்பதாக எண்ணி இரகசியப் போலீசார் எனக்கு அடுக்கடுக்காக இன்னல்களைத் தந்தார்கள். பெரியோர்கள் போல் நடித்து வீட்டிற்கு வருவார்கள்; துறவிகளாய், இரவலராய், கூலிகளாய் விதவிதமாக வந்து எனக்கு அவர்கள் தந்த இன்னலுக்குக் கணக்கே இல்லை. புதுச்சேரியில் வாழும் உரிமை எங்களுக்கு இல்லையெனப் பிரெஞ்சு அரசியலார் மூலம் சட்டமியற்றினர். குண்டர்களை ஏவி எங்கள் கொள்கைகளைத் தகர்க்கத் திட்டமிட்டனர்.

கொஞ்சு மொழிமாதர்கள் மூலம் எங்கள் புனித இதயத்திலே நஞ்சைக கலந்து விடலாம் என வஞ்சகம் செய்தனர். 'சாதியைக் கெடுப்பவன், சம்பிரதாய முறைகளை ஒழிப்பவன்' என வைதீகர்கள் கூறிய வசைமாரி ஒரு புறம்! 'இலக்கணம் தெரியாதவன்! பண்டைவரம்பை மீறுபவன்' எனப் பண்டிதர்கள் தொடுத்த சொல்லம்பு ஒருபுறம்! 'அனைவர்க்கும் உடைமை பொது என அடாது கூறி அழிந்து வருகின்றான்' எனச் செல்வந்தர்களின் ஏளனம் ஒரு புறம்! இவ்வளவு துன்

பங்களையும் பொறுத்தேன். என் மேல் வந்து விழுந்த துன்பங்களை எல்லாம் எடுத்தெறிந்தேன். நாடு விடுதலை பெறவேண்டும் என்ற கவலை ஒன்றைத் தவிர மற்றைய வற்றைக் கண்டு கலகலெனச் சிரித்தேன்! என்னைப் பகைவன், பாதகன் எனக் கூறிய வாய்களெல்லாம் நாளடைவில் "பாரதியார்" படித்தவன், பண்புள் ளவன், பாவாணன் எனக் கூறத் தொடங்கிவிட்டன.

வள் :— தமிழ் வீர! கனலில் புடம்போட் டெடுத்த தங்கமே! உருக்க உருக்கப் பொன் மாசற்று மாற்று யர்ந்ததாய்த் திகழும். துன்பத்தால் வருந்த வருந்த உயிரும் உள்ளமும் தூய்மையடைந்து உயர்வு பெறும். இன்பமும் துன்பமும் இவ்வுலக இயற்கை; இன்பத் தைக் கண்டு மனமகிழ்வதும், துன்பத்தைக் கண்டு மனம் வருந்துவதும் சாதாரண மனிதர்கள் செய்யும் செயலாகும். துன்பப் படுவோர்க்குத் துணை நின்று காக்க மாந்தர் யாரும் இரார். அவரைப் பகைமையாள ராகக் கொண்டு இகழுரையாடவோ எத்தனை பேர் வேண்டுமானாலும் இருப்பர். ஆகவே, மனிதன் வாழ் வில் எதிர்த்து வரும் துன்பத்தைத் துன்பமாகக் கரு தாது இன்பமாகக் கருதினால் எதிரி எனக் கூறியவர் அனைவரும் இணைந்து வாழ வருவர். இந்த அரிய நிகழ்ச்சியைத் தங்கள் வாழ்வில் காணுகின்றேன்.

> இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகுந்தன்
> ஒன்னார் விழையும் சிறப்பு.

பாரதி :— செவிகுளிரக் குறள் தந்த செந்நாப் புலவரே! எத்தகைய வறுமையில் நான் வாடிய போதும் ஈகைக் குணம் என்னிடத்து இயல்பாக

இருந்தது. பசி என்று வந்தவர்க்குப் புசி என்று ஏதாவது ஒரு பொருள் தராவிட்டால் ஏதோ பெருங் குற்றத்தைச் செய்தவனைப் போல் என் மனம் பேதுறும். புதுவை நகரிலிருந்த ஏழை எளியவர்க்கு என்னைக் கண்டால் ஒரு கொண்டாட்டம். புஷ் வண்டிக் காரர்கள் என்மீது கொண்டிருந்த அன்பிற்கு எல்லையே இல்லை. கந்தல் உடையோடு காட்சி தரும் அவர்களைக் கண்டால் நான் போட்டிருப்பது கரை போட்ட பட்டுத் துண்டானாலும் எடுத்துக் கொடுப்பேன். அவர்களின் இளநகை அரும்பும் இனிய முகம் கண்டு நான் பூரிப்பில் ஆழ்வேன். நான் என் வாழ்வில் அடைந்த அத்தனை இன்பங்களிலும் இந்த இன்பத்தையே பெரிதென எண்ணினேன்.

வள் :— உலக நெறி தெரிந்த உத்தமரே! செல்வத்தைக் குவித்துத் தானும் நுகராது, பிறர்க்கும் ஈயாது வாழும் மனிதர்க்கு இத்தகையதொரு சிறப்புத் தெரியாது. பூட்டிவைத்திருக்கும் பணப் பெட்டியை நோக்கியவாறே அவர் பூரிப்பால் மகிழ்வார்களே தவிர ஈந்து மகிழும் இன்பத்தை அறியார்கள். ஈந்து மகிழும் இன்பம் சிறந்தது. அது பேரின்பத்தைக் காட்டிலும் பெரியது என்பதை அவர்கள் தெரிந்து கொண்டிருப்பார்களேயானால் தம் பொருளைப் பூட்டி வைத்திருக்க மாட்டார்கள்.

> **ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை**
> **வைத்திழக்கும் வன்க ணவர்.**

தாங்களோ ஈதலினையயாக் கடை சாதலே சிறந்ததென எண்ணி ஈந்து வந்திருக்கிறீர்கள். மகிழ்ச்சி!

பாரதி :— மண்ணுலக வாழ்வை மணமுள்ளதாக்கி வைத்த விண்ணவரே! என் கவிதை வாழ்விற்கும் விடுதலை வாழ்விற்கும் உறுதுணையாக இருந்த நண்பர்கள் பெயரை நினைவு படுத்த விரும்புகிறேன். தங்களைப் போன்ற பெரியோர்களிடத்து அவர்கள் தம் பெயரைக் கூற மறந்து விட்டால் செய் நன்றி கொன்ற குற்றத்திற்கு ஆளாகி விடுவேன். அக் காலத்தில் சுதேசமித்திரன் பத்திரிகையை நடத்தி வந்த திருவாளர் சுப்பிரமணிய ஐயர் தக்க சமயத்தி லெல்லாம் என்னை அழைத்துத் தன் பத்திரிகை அலுவலகத்திலே பதவியில் அமர்த்தி என் இல்லத்தின் வறுமைக் கொடுமையைச் சற்றுத் தணித்து வந்தார்.

புதுச்சேரி வாழ்க்கையில் எனக்கு வீடு தந்து என்னை அன்போடு போற்றிய திருவாளர் விளக்கெண்ணெய்ச் செட்டியார் என் இதயத்தில் குடிபுகுந்த முக்கிய நண்பர்களில் ஒருவர். புதுச்சேரிக்கு அருகிலுள்ள முத்தியாலு பேட்டையில் உள்ள கிருஷ்ணசாமிச் செட்டியார் பொருளாதார முட்டுக்கட்டை என் வாழ்வில் நேர்ந்த போதெல்லாம் அதைப் பெயர்த்தெறிந்து பண உதவி செய்த பண்டாளர். பொன்னு முருகேசம் பிள்ளை குடும்பம் எனக்களித்த உதவி கணக்கிலடங்காது. அவருடைய மனைவியார் தாயற்ற எனக்குத் தாயன்பை விளக்கிக் காட்டிய பெருமாட்டி. ஆதித் திராவிட வகுப்பைச் சேர்ந்த கனகலிங்கம் என்பவர் நண்பனாய், சீடனாய், நல்லாசிரியனுமாய் இருந்து வந்தார். அரவிந்தர், ஆர்யா, வ. வே. சு. ஐயர், வ. உ. சி. இவர்கள் அனைவரும் வையத்தில் துன்பமென்பதே

இல்லை என்று தோன்றுமாறு எனக்கு இன்பம் அளித்து வந்தனர். இவர்களை எல்லாம் என்னால் எப்பொழுதுமே மறக்க முடியாது.

வள்:— பண்பாடு பெற்ற பழகு தமிழ்ப் பெரியீர்! தாங்கள் கொண்ட நட்புக் குறித்து நான் பெரிதும் மகிழ்வடைகிறேன். தங்களுடைய நண்பர் அனைவரும் தங்களுக்கு இன்னலை நீக்கி உறுதுணையாய் நின்று உடனுறைந்தார்கள். ஒருவர் ஒருவரைப் பார்த்துப் பேசுவதாலோ அல்லது ஒருசிறிதுகாலம் பழகி விடுவதாலோ நட்பினர் என்று கூறிவிட முடியாது. உண்மை நண்பராயின் துன்பம் உற்றுழி உதவுதல் வேண்டும்.

உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

பாரதி:— திறமான வாழ்க்கைக்குச் செந்தமிழில் குறள் தந்த பெருமானே! என் வாழ்நாளிலே எனக்கு ஏற்பட்ட இன்னலை எல்லாம் மறந்து இறுதிக் கட்டத்திற்கு வருகிறேன். புதுச்சேரி வாழ்வை ஒரு வகையாகக் கழித்துவிட்டுத் திருநெல்வேலி மாவட்டம் சென்று வசிக்கலாம் எனக் கிளம்பினேன். என் மீது அடுக்கடுக்கான குற்றங்களைச் சாட்டி என்னை விழுப்புரத்திலே கைதியாக்கிச் சிறையிலே யடைத்தனர். நல்லவர்களும் நானிலத்தே வாழுகின்ற காரணத்தால் நான் விடுவிக்கப்பட்டேன். நான் விடுவிக்கப்பட்டதற்கு வேறு காரணமும் கூறுகிறார்கள். ஆனால் அந்தக் காரணம் எனக்குத் தெரிந்திருந்தால் நான் அதற்குச் சம்மதித்திருக்கவே

மாட்டேன். திருநெல்வேலி மாவட்டத்திலே சிறிது காலத்தைக் கழித்தேன். மீண்டும் என்னைச் சென்னை அழைத்தது. சென்னை சென்று 'சுதேச மித்திரன்' அலுவலகத்திலே பணியாற்றினேன். ஆனால் பாண்டிச்சேரியில் இருந்ததுபோல் அரசியல் கிளர்ச்சிகளில் அதிகப் பங்கு கொண்டிருந்தேன் என்று என்னால் அப்பொழுது கூற முடியாது. திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவிலுக்கு அடிக்கடி போவது வழக்கம். அக் கோயிலில் உள்ள யானைக்குப் பழமும் தேங்காயும் தருவேன். அந்த யானையும் அன்புடன் வாங்கியுண்ணும். ஒரு நாள் என்னைப் புரிந்துகொள்ளத் தவறிய அந்தயானை துதிக் கையால் தூக்கிக்கொண்டு தன் கூடத்திற்குச் சென்றது; மயங்கிக் கிடந்தேன்; அன்று எழுந்த மயக்கம் தெளியவே இல்லை. மெலிந்த என் உடற்குத் தீராத நோய். மாருத இயற்கை, மனைவி மக்களை விட்டுப் பிறந்த பொன்னுட்டையும் பழகிய பெரியோர் களையும் விலக்கி 1921-இல் எனை யாட்கொண்டுவிட்டது. நாட்டைப் பிரிந்தாலும் நல்லவராகிய தங்களைக் காணப் பெற்றது குறித்து மகிழ்ச்சி யடைகிறேன். வாழ்க வள்ளுவர்! வாழ்க வள்ளுவம்!

வள்:— முக்காலமும் உணர்ந்த முத்தமிழ்ப் புலவ! அன்னியரின் கொடியின் கீழ் நின்று 'ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று ஆடுவோமே' என்று பாடினீர். இதோ அந்தச் சுதந்திரத்தை யனுப வித்துக்கொண்டு தங்கள் பாட்டை நாவாரப் பாடு கிருர்கள். தாங்கள் நிறைமொழி மாந்தர்; தங்களைப்

போன்ற நிறை மொழி மாந்தர்கள் நிறையத் தோன்று வார்களாக!

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

பாரதி:— மற்றுமுள்ள பெரும் புலவர்களே! வள்ளுவரே! வருகிறேன், வணக்கம்.

வள் :— வணக்கம்.

9. வள்ளுவரும் — தாகூரும்

வள்ளுவர் :— இன்பக் கவியாலே இலக்கியத்தின் எழில்வளத்தை எங்கும் பரப்பிவந்த தாகூரே! வருக! வருக!!

தாகூர் :— மலர்க்காவியம் தந்த மாவேந்தே! "கற்றாரைக் கற்றாரே காமுறுவர்" அன்றோ? கவியுலகிலே காலத்தைக் கழித்துவந்த நான் விண்ணுலகம் வந்ததும் வேதனைப்பட வேண்டுமே என எண்ணினேன். உங்களைக் கண்டதும் அந்த எண்ணம் ஓடிவிட்டது என் மண்ணுலக வாழ்வை மறைக்காமல் கூறுகின்றேன். உங்கள் கருத்தாரும் திருக்குறளை எடுத்துரைக்க வேண்டுகிறேன்.

வள் :— கொள்ளக் குறையாக் கவியின் குவையே! சொல்லிடுக நும் வாழ்வை. உள்ளம் மகிழ உரைப்பேன் குறளதனை.

தாகூர் :— தீதறியாப் பெரும் புலவ! 1861-ஆம் ஆண்டு, கலையுலகின் சிந்தனையைத் தன்பால் ஈர்க்கும் கல்கத்தா நகரிலே பிறந்தேன். எனது தந்தையார் தேவேந்திரநாத தாகூர் ஆவார். பிறரை ஏமாற்றி வாழ்வதை எள்ளளவும் விரும்பாதவர். 'வாழ்க்கைப் பாதை வெற்றியை நோக்கிச் செல்ல வேண்டுமானால் வேண்டுவது அடக்கமே' என விளக்கமாகக் கூறுவார். கூறியதோடு மட்டுமல்ல; அக்கொள்கையை வாழ்க்கையில் ஏற்று நடந்தார். அடங்கி வாழும் ஆமையைப் போல நெஞ்சம் ஒடுங்கி வாழ்ந்த அவர் வாழ்வு உண்மைத் துறவிகளின் வாழ்க்கையைவிடச் சிறப்படைந்

தது. இன்பவாழ்வு வாழ ஏராளமான செல்வம் இருந்தும், ஆடம்பரத்தை அவர் விரும்பவில்லை. வாழ்க்கை என்ற போர்க்களத்தில் அடக்கம் என்ற ஆயுதத்தைக் கையில் கொண்டார். தாக்கவந்த துன்பங்களை எல்லாம் தகர்த்தெறிந்தார்.

வள் :— ஆமைநிலை புகன்ற அண்ணலே! நும் தந்தையின் பண்புக்குத் தக்க குறள் அறிக. இம்மையில் மட்டுமல்ல; இதயத்தோடு ஒட்டிய இப்பண்பினால் எழுமையும் அவர் வெற்றி பெற்றவர் ஆவர்.

> ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
> எழுமையும் ஏமாப் புடைத்து.

செல்வராக இருந்தும் நல்லடக்கத்தை மேற்கொண்டார். இது மிகவும் பாராட்டுதற்குரியது.

> எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
> செல்வர்க்கே செல்வந் தகைத்து.

தாகூர் :— அடக்கநிலைபற்றி அழகுக் குறள் தந்த அறிஞரே! என்னைச் சுற்றிலும் கவிஞர்கள் வாழக் கண்டேன். ஏட்டுக் கல்வியிலே என் எண்ணம் செல்லவில்லை. பள்ளிக்கூடத்தில் பயந்து உலவுவதைவிடக் கவிதைபாடிக் காவியத்திலே திளைப்பதே மேல் எனக் கருதினேன். நகைச்சுவை மன்னராக விளங்கிய கைலாசம் என்பவர் என் இளம் பருவத்தில் கவியமுதை எனக்கு ஊட்டினார். அவர் மறந்தாலுங்கூட எங்கள் வீட்டிற்கு வரும் மொழித்துறை முற்றிய புலவர்கள் கவிதை பாட மறந்ததில்லை. எங்கிருந்தாலும் சரி; கவிதையின் எழுச்சி முழக்கம் கேட்கும்; கவிதைக் குர

லைக் கேட்டுக்கேட்டு என் இதய மலரும் கவிதைத் தேனைக் கொட்ட ஆரம்பித்தது. நல்லனவற்றைக் கேட்டேன்; நாடறியும் கவிஞனாக மாறினேன். கேள்விச் செல்வம் வாழ்வுக்கு இன்றியமையாததல்லவா?

வள் :— கேள்வியால் தோட்கப்பட்ட செவி கொண்டீர்! நல்வாழ்வுபெறக் கேள்விச் செல்வம் இன்றியமையாதது. நல்லவை கேட்டீர்கள்; நாடறியும் கவிஞர் ஆனீர்கள்.

> எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
> ஆன்ற பெருமை தரும்.

தாகூர் :— பெரியீர்! உலகம் என்ற பள்ளிக்கூடத்தில் இயற்கை என்ற புத்தகத்தை வைத்து நான் படித்த பாடங்கள் பல. இமயமலைக்கு நானும் என் தந்தையாரும் சென்றிருந்தோம். இலக்கியங்களை எனது தந்தையார் எனக்குச் சொல்லிக் கொடுத்தார். கவனத்தோடு கற்றேன். அப்பொழுது மலையரசி என்னிடத்திலே தன் மாண்பை எல்லாம் காட்டினாள். வளர்ந்தோங்கும் மரங்கள்; ஓடிவரும் அருவிகள்; பாடிவரும் புள்ளினங்கள்; மாறிவரும் மேடுபள்ளங்கள் - எல்லாம் நீதியைப் புகட்டின. மகிழ்ந்தேன்.

எனது பதினேழாவது ஆண்டிலே என் உடன் பிறந்த அண்ணன் சத்யேந்திர நாதருடன் இங்கிலாந்திற்குச் சென்றேன். அலைகடல் தன் நிலைபெயர்ந்து ஆடும் திருக்கோலத்தைக் கண்டேன். கவிசேரும் என் இதய ஆழத்தை அந்த அழகு எட்டிப்பிடித்து இன்பத்தை ஊட்டியது. இயற்கையன்னை தன் எழிற்கையை நீட்டி என்னை அழைத்தாள். என்றாலும் அவள்

காட்டிய துன்பக் காட்சிகளையும் நான் சொல்லாமல் இருக்கமுடியாது. உதிர்ந்து விழும் கனிகள்; உருண் டோடும் காய்கள்; காய்ந்து கிடக்கும் சருகுகள்; வாடிக் கிடக்கும் பூக்கள் - இவை வாழ வழியற்றோரின் வறண்ட பாலைவன வாழ்வை என் நெஞ்சத் திரை யிலே படமாக்கிக் காட்டின.

இன்பமும் துன்பமும் மாறிமாறி வரும் என்பதை இயற்கை கற்றுக கொடுத்த அளவுக்கு வேறுயாரும் எடுத்து இயம்பவில்லை. ஆழ்ந்த அறிவு வேண்டும் என்பதை ஆழியும், "அளக்கலாகா அளவும் பொரு ளும், துளக்கலாகா நிலையும் தோற்றமும்" வேண்டும் என்பதை மலையும் எடுத்துக கூறின. என் வாழ்வில் துன்பம் தொடர்ந்து முற்றுகையிடக் கண்டேன். கற்புநெறி மாறாப் பொற்புறு மனைவி இறந்தாள். கண்போன்ற என் மகளும் இறந்தாள். மன அமைதி பெறக்கூடிய நேரத்தில் மக்களின் மனமாசினை அகற்றும் என் ஆசிரிய நண்பர் ஒருவரும் இறந்தார். இவர்களது உயிர்களைத் தேடிப் புறப்பட்டாற் போல எனது அருமைத் தந்தையாரும் இறந்தார். நேற்று வாழ்ந்தார்கள். ஆனல் இன்றோ இல்லை. நிலையிலலாத சிற்றின்பத்தையே பெரிதாகக் கருதி பிறர்க்குத் தீமைபயக்கும் புல்லறிவாண்மை மிகவும் கொடிய தல்லவா!

வள்:— இயற்கை தரும் நீதிகளைத் தெளிவாக எடுத் துரைத்த தேசுடையீர்! இறந்தவர் பலரையும் சொல்லி உலக வாழ்வின் நிலைமையை உணர்ந்து கூறினீர்கள். நேற்று வாழ்ந்தார்கள்; இன்றோ இல்லை என்றீர்கள்.

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு.

நில்லாதவற்றை நிலையின என்றுணரும் மக்களின் புல்லறிவைப் பற்றிப் புகன்றீர்கள்,

நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை.

கவிஞரே! தங்கள் மனைவியாரைப் பற்றி..........

தாகூர்:— கூறுகிறேன். கேளுங்கள். என் இல்லக் கிழத்தி மிருணாளினி என்னும் நல்லிசைச் செல்வி ஆவள். இலக்கியப் பண்புகள் ஒருங்கே பெற்ற ஏந்திழையாள். செல்வ வளம் பொருந்திய உயர் குலத்திலே பிறந்தும் ஆடம்பரத்தை அவள் விரும்ப வில்லை. அவள் இல்லறத்திலேயே தவம் ஆற்றியவள். துறவு வாழ்க்கையை இல்லறத்தில் எப்படி ஏற்க முடியும் என்று கேட்கலாம். தன் குடும்பத்தாலும், பிற உயிர்களாலும் தனக்கு வரும் துன்பங்களை எல்லாம் பொறுத்துக் கொள்வாள். பிற உயிர்கட்கு எள்ளளவும் தீங்கு செய்தறியாள். அவள் வாழ்வு தவ வாழ்வினும் தவச் சிறந்ததன்றோ!

வள்:— சிறந்ததுதான் தவத்திற்கு நான் கூறியுள்ள இலக்கணமும் அதுதான்.

உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு.

தவம் செய்வாரினும் நும்மனைவி தவச் சிறந்தவளே, ஐயமின்று.

தாகூர் :— எனது தந்தையாரின் கட்டளைப்படி நிலங்களைக் கவனிக்கும் பேறு பெற்றேன். பேறு என்று ஏன் கூறுகிறேன் என்றால், கிராமங்களில் வாழ்கின்ற மக்களின் சூழ்நிலையை அதன் பிறகுதான் நன்கு உணர்ந்தேன். சுழன்றேன்; துடித்தேன்; ஒரு நாட்டின் உயிர் நாடியாக விளங்குகின்ற கிராமங்கள் வளர்ச்சியடைந்தால் ஒழிய வாழ்வில்லை என முடிவு செய்தேன். கிராமச் சீர்திருத்தத் தொண்டினைத் தொடங்கினேன். கவிதைகள் எழுதினேன். கருத்துக் கள் பல கூறினேன். வங்காளத்திலே பத்மா ஆற்றின் கரையில் இருந்த நிலங்கள் என் முயற்சியால் பயன் மிகத் தந்தன. பலநிலங்கள் கவனிப்பாரின்றிக் கிடப் பதைக கண்டேன். வாழமுயற்சி செய்யாது, சோம்பேறியாகக கிடக்கும் உழவர்களைப் பார்த்து நிலம் என்னும் நல்லாள் சிரிக்கக் கண்டேன்.

வள் :— உழவர் நிலைபற்றி உரைத்த உயர் வுடையீர்! முயற்சி திருவினையாக்கும்; நிலமிருந்தும், உடம்பில் வலுவிருந்தும் உழைக்க முன் வராது வீட்டிலே முடங்கிக் கிடப்போரைக் கண்டு நிலமென் னும் நல்லாள் சிரிக்கக் கண்டேன் என்றீர்கள்.

> இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்
> நிலமென்னும் நல்லாள் நகும்.

தாகூர்:— பாட்டிசைத்த பாவலரே! ஐந்தடுக்கு மாளிகையிலே இருந்தாலும் அமைதி இன்றேல் வாழ்வில் பயன் ஏது. அமைதி இழந்து அல்லல் உறுவோர் அவனியிலே பலர். *அமைதி சூழ்ந்த சாந்தி நிகேதனத்தில் கல்வி நிலையம் ஒன்றை உண்டாக்

கினேன். குழந்தை உலகத்தின் வளர்ப்பு சிறிய முறையில் இருக்கப் பாடுபல பட்டேன். சாந்தி நிகேதனக் கல்வி நிலையத்தை ஆரம்பிக்கப் பொருளுதவி புரிந்தவர் எனது தந்தையார். 'நைவேத்தியம்' என்ற நூலை நான் பாடினேன். அது கேட்டு மகிழ்ந்த எனது தந்தை பரிசாகப் பொருள் தந்தார். அதைக் கல்வி நிலையத்துக்குப் பயன்படுத்த முற்பட்டேன். பழுமரத்தை நாடிவரும் புள்ளினம்போல, படித்துப் பயன்பெற சாந்தி நிகேதனத்துக்கு மாணவர் பலர் வந்தனர்.

வள் :— கலைக் கோயில் எழுப்பிய கவியரச! பொருட் செல்வமும் கல்விச் செல்வமும் நல்லவராகிய தங்களிடத்தில் இருந்ததால் எதிர்காலச் சிற்பிகளாம் நமது நாட்டின் இளஞ் சிறுவர் பலர்க்கும் பயன் பட்டன.

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடையான் கண் படின்.

தாகூர் :— தொண்டுதனைப் போற்றும் தூயோய்! நான் எழுதிய 'கீதாஞ்சலி' என்னும் நூல் எனக்கு நோபல்பரிசை வாங்கித் தந்தது. பிறநாட்டார் என்னைப் போற்றிய பிறகு பிறந்த நாட்டார் என்னைப் போற்ற ஆரம்பித்தார்கள். பட்டங்களுக்கு மேல் பட்டங்கள் வந்தன. 'இலக்கணம் தெரியாதவன்' என என்னை எள்ளி நகையாடியவர்கள் - 'இரவீந்திரன் போல இயற்கைக் கவியைப் பார்த்ததில்லை' என்றனர். 'இவனுக்கு என்ன தெரியும்' எனப் பொறுமையினாலே புகன்றவர்கள் பூமாலை போட்டு

என்னைப் போற்றினர். மனிதனைக் கெடுக்கும் மாபெரும் தீயசக்தி அழுக்காறு அல்லவா!

வள் :— பரிசுபெற்ற பாவேந்தே! பிறர் வாழ்வு கண்டு பொறுதவன் அறத்தையும் ஆக்கத்தையும் இழந்து அல்லற்படுவான்.

அறன்ஆக்கம் வேண்டாதான் என்பான் பிறனாக்கம்
பேணா தழுக்கறுப் பான்.

தாகூர் :— நீதிநெறி புகன்ற நேர்மைத் தலைவ! உலக மக்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழவேண்டும் எனக் கருதினேன். சாந்திநிகேதனத்தில் 1918-இல் விசுவபாரதி என்ற பொது நிலையம் ஒன்றை கலை வளர்ச்சிக்காக ஏற்படுத்தினேன். எல்லா நாட்டுக் கலைகட்கும் இடம் கொடுத்தேன். சாதி சமயங்களால் ஆயிரக்கணக்கான பிளவுகட்காளாகிக் கிடக்கும், மக்கள், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற நல்ல நினைப்பைக் கொள்ள வேண்டும் என எண்ணினேன். விசுவபாரதி மக்களை இணைக்கும் மன்றமாக விளங்கியது. ஆண்ட்ரூஸ், பியர்சன் என்ற ஆங்கிலேயர்கள் விசுவபாரதியின் வளர்ச்சிக்காகச் செய்திருக்கும் பணிகள் கணக்கிறந்தனவாகும். செய்யாமல் அவர்கள் செய்த உதவிக்கு யான் என்ன கைம்மாறு செய்ய வல்லேன்.

வள் :— வேற்றுமை போக்கும் விசுவபாரதி நாட்டின் கலைக்கென நன்முறை அமைத்த நாவல!

செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது.

தாகூர் :— உள்ளத்தை உருக்கும் உயிர்க் குறள் தந்த உத்தமரே! காந்தியடிகட்கும் எனக்கும் கொள்கையில் வேறுபாடு உண்டு. ஆனால் எனது கல்வி நிலையத்துக்கு அவர் உதவிபல புரிந்தார். காந்தியடிகளின் உயர்ந்த பண்புகளை உலக மக்கள் எல்லாம் மேற்கொண்டு வாழும் நாளே இன்பத் திருநாளாகும். ஊழி பெயர்ந்தாலும் சரி, காந்தியடிகள் தன் உள்ளத்துறுதியிலே தளரமாட்டார்.

வள் :— சான்றாண்மை மேற்கொண்டீர்! கடல் மடை திறந்தாற்போல் காந்தியடிகளைப் பற்றிக் கூறினீர்கள். ஊழி பெயர்ந்தாலும் உள்ளம் பெயராத அவர் சால்பைக் கூறினீர்கள். இதோ குறளை அறிக.

ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார்.

தாகூர் :— குறள் தந்த கொற்றவரே! நேரம் அதிகமாகிறது. நான் எழுதிய நூலகளைப் பற்றி விளக்கமாகக் கூற இயலவில்லை. அரசியல் தொண்டினைப்பற்றி அதிகமாகக் கூறமுடியவில்லை.

வள் :— வருந்தற்க.

தாகூர் :— தெள்ளு தமிழ் தந்த வள்ளுவரே! 1941-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் ஏழாம் நாள் எனது ஆவி, பயங்கரமான உலகத்தை விட்டுப் பறந்தது. பறகடித்து வந்தேன். சிந்தனைச் சிறப்பையக் கண்டேன். தெய்வக் குறள் கேட்டேன். நன்றி. வணக்கம்.

வள் :—வணக்கம்.

10. வள்ளுவரும் — வ. உ. சி. யும்

வள்ளுவர் :— நாகரிகமற்றுக் காட்டுமிராண்டியாய் மலைகளின் குகைகளிலும் மரங்களின் அடியிலும் வாழ்ந்து வந்த ஆதிகாலத்து மனிதன் தனது எண்ணத்தைப் பிறன் ஒருவனுக்குத் தெரிவிக்கும் பொழுது ஊமையனுய்க் கைச்செய்கையின் மூலம் காட்டிவந்தான். அத்தகைய காலத்திலே ஊமைநிலை ஓட முதன்முதல் வாயசைத்து ஒலி உண்டாக்கிய மொழி தமிழ்மொழி. திருந்திய பண்பும் சீர்த்த நாகரிகமும் பெற்று விளங்கும் தமிழ்மொழியை நாட்டிலே நன்முறையில் பரப்பிவந்த நாவல! வருக! வருக!!

வ. உ. சி :— அறம் பொருள் இன்பம் வீடென்னும் அந்நான்கின் திறம் தெரிந்து செப்பிய தேவே! தங்களைக் காணுது தாயைப் பிரிந்த சேயெனத் தனித்தேன். இங்கே உவப்பத் தலைக்கூடியதும் உள்ளம் மகிழ்கின்றேன். மாண்பு தவழ் குறள் நூலே என் வாழ்வை மாசற்றதாக்கியது; குறள் அறிவேன் என்றாலும் வாழ்வுப் பயணத்திலே நான் கண்ட பாலைவனங்களையும் சோலைவனங்களையும் சொல்லுகிறேன்; உங்கள் திருவாயால் உரைத்திடுக நற்குறளை.

வள் :— அலைகடல் நடுவண் பலகலம் செலுத்திய கலைநிறை தமிழரின் நிலைபுகழ்ச் செல்வ! பரம்பரை பரம்பரையாக வெற்றித் திருப்பெற்று, தரணி எங்கும் பரணி பாடிவரும் தமிழகத்து மண்ணிலே பிறந்து

இறுதிவரை உறுதி தளராது நின்ற தங்களைக் கண்டதும் என் இதய மலர் விரிகிறது. வாழ்வுப் பாதையிலே தாங்கள் கண்ட வண்ணமலர்ச் சோலைகளையும் வறண்ட நிலத் தன்மைகளையும் கூறுங்கள்; குறள் சொல்வேன்.

வ. உ. சி:— உள்ளக் கமலம் மலர்த்தி உளத்துள்ள தள்ளற்கரிய இருள் தள்ளும் குறள் தந்தோய்! 'நெல்லும் உயிரல்ல, நீரும் உயிரல்ல மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்ற உண்மையை உணர்ந்த அரசர் பிறந்த நாட்டிலே பிறந்தேன் நான். அதனாற்றான் அநீதிக்காரர்களின் போக்குக் கண்டு என் உள்ளம் அனல் ஆயிற்று. நாடாக இருக்கலாம்; காடாக இருக்கலாம்; பள்ளமாக இருக்கலாம்; மக்கள், நிலத்தின் தன்மையை வைத்து ஒரு நாட்டுக்கு மதிப்புக் கொடுக்கமாட்டார்கள். அந்த நாட்டிலே இருக்கின்ற, வாழ்கின்ற மக்களைப் பொறுத்துத்தான் பெருமை கொடுப்பார்கள். இந்த உண்மையை உலகிற் குணர்த்திய உயர்நெறித் தமிழரின் வழித்தோன்றல் நான். மரணப்படுக்கையிலே நான் கிடக்கும்போது கூட நாட்டின் மானத்தையே பெரிதெனக் கருதினேன். கண்ணினும் இனிய சுதந்திரத்தை விட்டுக் கைகட்டிப் பிழைக்க விரும்பவில்லை. புகழும் நல்லறமும் அன்றி எல்லாம் வெறும் பொய் யென்று கண்டேன்.

வள்:— வலம்படு குரிசில்! எண்ணெய் நுரை முகந்தன்ன மென்பூஞ் சேக்கையை மேலெனக் கருதாது, உதறித்தள்ளி, பருவத்துச் சுகத்தைப் பறி

கொடுத்து நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட நமது செயல் போற்றற்குரியது. வருங்கால இளைஞர்கள் வாழ்விலே வாகை சூட நமது வாழ்க்கை வெற்றி வழி வகுக்கும் என்பதில் எட்டுணையும் ஐயமின்று.

வ. உ. சி:— உள்ளுதொறும் உள்ளுதொறும் உள்ளம்உருக்கும் தெள்ளு குறள்தந்த சீர்சால் புலவ! நான் வாழ்ந்த கதையைச் சொல்லுகிறேன். இலக்கிய வளம் இல்லை என்றாலும் ஏற்று அருள்புரிவீராக! பைந்தமிழைப் போற்றி வரும் பாண்டிய நாட்டிலே ஒட்டப்பிடாரத்திலே 1872-ஆம் ஆண்டு பிறந்தேன். எனது தந்தையார் உலகநாத பிள்ளை ஆவர். ஆருயிர் போல அறநெறியைப் போற்றுவார். நெஞ்சம் கலங்கும் நிலைவந்தாலும் கூட நீதி நெறியினின்றும் மாறமாட்டார். மக்கட் பண்பில்லாதவர்களைப் பார்த்து 'உங்கள் மனப்போக்கை மாற்றிக்கொள்ளக் கூடாதா' எனக் கேட்பார். ஆன்ற குடியிலே பிறந்த எனது தந்தையார் அன்புடைமையையே பெரிதெனப் போற்றினர். அனைவராலும் விரும்பப்பட்டார்.

வள்:— முடிவிலாக் கீர்த்தி பெற்றோய்! புவிக்குள்ளே முதன்மை பெற்றோய்! நமது தந்தையாரின் நீதிநெறிபற்றியும் அறநெறிபற்றியும் எடுத்துக் கூறினீர்கள்; மக்களால் பாராட்டப் பெற்றார் என்றீர்கள்;

> நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
> பண்புபா ராட்டும் உலகு.

வ. உ. சி:— வான் குறள் தந்த வள்ளுவரே! கற்பகத்தின் பூங்கொம்பாய், காமன்றன் பெருவாழ்வாய், பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமாய், மாணிளம் பிணையாய், தெய்வ வளரிள மூகையாய் விளங்கியவள் என் மனைவி வள்ளியம்மை. அவளுடைய உயரிய பண்பு நலங்களை எடுத்துரைக்க ஒரு 'நா போதாது. தங்கள் திருக்குறளைப் போற்றிப் படித்து, குறள் நெறி நின்ற அறநலச் செல்வி அவள். கிடைத்தற்கரிய அரும்பொருளாக இருந்தாலும் சரி; விருந்தினர்க்குக் கொடுத்தே உண்ண வேண்டும்,' என்று கூறி வாழ்கையில் செய்து காட்டிய வாழ்வரசி. செல்வம் கிடைத்தால் அதை வைத்துப் பூட்டி வல்லாங்கு வாழ்வோம் எனக் கருதாது எல்லோர்க்கும் கொடுக்கும் இயல்பு இயற்கையாகவே அவளிடத்தில் காணப்பட்டது. சொல்லளவில் இன்றி உண்மையிலேயே என் வாழ்க்கைத் துணைவியாய் அவள் விளங்கி நின்றாள்.

வள் :— வள்ளியம்மையின் உள்ளநிலை கூறிய உயர்தலைவ! வந்த விருந்தினரை வரவேற்கும் நும் மனைவியின் உயரிய பண்புகளைக் கூறி அவள் உண்மையிலேயே வாழ்க்கைத் துணைவியாய் விளங்கிய சீர்சால் இயல்பைப்பற்றிச் செம்மையுறக் கூறினீர்கள். அரிய பொருளாக இருந்தாலும் விருந்தினர்க்குக் கொடுத்து உண்டு வாழ்வதே தலையாய பண்பாகும்.

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.

வ. உ. சி:— செழுந்தமிழ்க்கோர் செஞ்ஞாயிறே! சுகமும் துக்கமும், இன்பமும் துன்பமும், உயர்வும் தாழ்வும் வாழ்க்கையில் மாறிமாறி வருகின்றன. உயிர் போன்ற என் மனைவியின் உள்ளத்து அன்பை நான் உணர்ந்துவரும் நாளில் துன்ப இருள் என்னைச் சூழக் கண்டேன். 1901 ஆம்-ஆண்டு வள்ளியம்மையை வானுலகம் அழைத்துக் கொண்டது. ஆம்! அவள் பிணமானாள். வாழ்க்கையிலே பிரியாத இருவரைப் பிரித்துவைத்த கூற்றுவனே! நீ நோயின்றி 'வாழ்வாயாக' என வாழ்த்தினேன். நானோ வாழ்க்கைத் துணைவியின்றி வாடினேன். முட்டையிலிருந்து வெளியுலகை நோக்கிப் பறக்கும் பருவத்துப் பறவை மீண்டும் அந்த முட்டைக்குள் வந்து நுழைவதில்லை. உயிராகிய பறவையும் அப்படித்தான் என என்வாய் ஏதோ முணுமுணுத்தது. வள்ளியம்மைக்குப் பிறகு மீனாட்சியம்மையை மணந்து கொண்டேன்.

வள் :— திண்ணிய நெஞ்சும் தெளிந்த நல்லறிவும் கொண்ட தலைவ! குணப் பெருங்குன்றே! யாக்கை நிலையாமையைப் பற்றிக் கூறிய நும் கருத்து வரவேற்கத்தக்கது. நிலையாமையை உணரக் கூடிய ஆற்றல் நிரம்பியவர் வாழ்வில் சிலரே. நிலையாமையை உண்மையிலேயே உணர்ந்த பெரியவர்கள் பிறர்க்குத் தீது செய்ய விரும்பார். திருந்தி வாழ்வர். உடலுக்கும் உயிருக்கும் தாங்கள் கூறிய உவமை மிகவும் பொருத்தம் உடையதே.

குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு.

வ. உ. சி:— ஓது குறட்பாவால் உலகத்தைத் தானளந்த மாதவத்தீர்! என் வாழ்விலே எனக்கு உதவிசெய்த உத்தமர்கள் பலர். மாரிபோலப் பாரி வரையாது வழங்கிய வள்ளல் என்பதை இலக்கியத் திலே படித்ததுண்டு. பார்த்ததில்லை. ஆனால் என் வாழ்விற்காக இடையூறு பலவற்றையும் தாங்கி உடல் உழைப்பை வரையாது வழங்கிய வள்ளல்களை நேரில் கண்டேன். இதோ அவர்களது பெயர்ப் பட்டியலைத் தருகிறேன்: பாட்டுக் கொருபுலவன் பாரதி; தீவிர வாதி திலகர்; சொல் வேந்தர் சுப்பிரமணிய சிவா; சாற்றரும் புகழ்சால் சாமி சகஜானந்தா முதலிய வர்கள் ஆவார்கள். அவர்கள் எனக்காகச் செய்திருக் கும் அச்சமற்ற சேவை சொன்னல் உடல் சிலிர்க்கும்; உளம் பதைக்கும்.

வள்:— செல்வச் சிதம்பரமே!

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றும் கோல்லோ உலகு.

வ. உ, சி:— வாராது போல்வந்த மாமணியே! வள்ளுவரே! பாரதியைப் பற்றிப் பகர்வேன் சில வார்த்தை "நமக்குத் தொழில், கவிதை, நாட்டிற்கு உழைத்தல், இமைப் பொழுதும் சோராதிருத்தல்" என எழுச்சி முரசு கொட்டிய எழில் பாரதி,

"சேரன்தம்பி சிலம்பை இசைத்ததும்,
தெய்வ வள்ளுவன் வான்மறை தந்ததும்
பாரில் நல்லிசைப் பாண்டிய சோழர்கள்
பாரளித்ததும் தருமம் வளர்ந்ததும்"

என தமிழகத்தின் பெருமையை, சிறப்பாகத் தங்களின் பெருமையைத் தலைநிமிர்ந்து பாடியபாரதி,

"நீலப்பெருங்கடல் எந்நேரமுமே தானிசைக்கும்
ஓலத்திடையே உதிக்கும் இசையினிலும்
மானுடப் பெண்கள் வளரும் ஒரு காதலினால்
ஊனுருகப் பாடுவதில் ஊறிடும்தேன் வாரியிலும்
வேயின் குழலோடு வீணைமுதலா மனிதர்
வாயினிலும் கையாலும் வாசிக்கும் பல்கருவி
நாட்டினிலும் காட்டினிலும் நாளெல்லாம் நன்றொலிக்கும்
பாட்டினிலே நெஞ்சைப் பறிகொடுத்த பாரதி"

என் வாழ்வில் தன் நெஞ்சைப் பறிகொடுத்த செய்தியை நினைத்துப் பார்க்கும்பொழுது இறும்பூது எய்துகின்றேன். நீதிபதி "பின்ஹே" யின் முன்னிலையில் எனக்காகப் போராடி, இல்லை, நீதிக்காகப் போராடி என் தரப்பில் சாட்சி சொன்னார். "பின்ஹே" யின் அநீதியான தீர்ப்பைக் கண்டு ஆத்திரம் கொண்டார். என் கருத்தைக் கவிதையிலே பாடி உயிர் கொடுத்தார். எனது தலைவர் திலகரைப் பற்றித் தீஞ்சுவைக் கவிதைகள் தீட்டினார். மாசற்ற பாரதியை நண்பராகப் பெற்றதால் நன்மை பல அடைந்தேன்.

வள்:— இன்னிசைத் தீம்பாடல் இசைத்திட்ட பாரதியின் கன்னித் தமிழ்க் கவியைக் காதாரக் கூறி வந்தீர்! பாரதியின் நட்பால் பயன்பெற்ற பகுதியைக் கேட்டேன். மகிழ்ந்தேன்.

மருவுக மாசற்றார் கேண்மைஒன் றீத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு.

வ. உ. சி:— உலகப் புகழ் பெற்ற அழகுக் குறள் அரசே! திலகரைப் பற்றிச் சிலவார்த்தை .... செஞ் ஞாயிற்று நிலவு வேண்டினும், வெண்திங்களுள் வெயில் வேண்டினும் வேண்டியது விளக்கும் ஆற்றல் வாய்ந்தவர் அவர். திலகர் என்ற பெயரைக் கேட்டதும் 'பாய்ந்து வரும புலியோ, பதுங்கிவரும் பாம்போ' எனப் பகைவர்கள் பயந்தார்கள். நானோ அவரைத் தான் வழிகாட்டும் தலைவராகக் கொண்டேன். வடநாட்டுத் திலகரின் வழி நோக்கிச் சென்ற என்னைத் தென்னாட்டுத் திலகரென மக்கள் கூறினர்.

1907-ஆம் ஆண்டிலே சூரத் நகரிலே கூடிய காங்கிரஸ் மிதவாதிகட்கும் தீவிரவாதியாகிய எங்கட்கும் கருத்து மாறுபாடுகள் ஏற்பட்டன. அப்பொழுது தீவிரவாதிகளின் தலைவராக இருந்த திலகருக்கு நான் மிகவும் ஆதரவளித்தேன். ஒத்துழையாமை இயக்கத்தின் காரணமாகவும் காந்தி போன்ற மிதவாதத் தலைவர்கட்கும் எங்கட்கும் கருத்து வேற்றுமைகள் வளர்ந்தன. வளர்ந்த போதிலும் காந்தியடிகளிடத்தில் நான் மிகவும் பற்றுதல் வைத்திருந்தேன். அவரின் ஒழுக்க நெறி என் உள்ளத்தில் இடம் பெற்றுவிட்டது. திலகரைப் பற்றிப் பாரதியார்,

> சேரலர்க்கு நினைக்கவும் தீயென
> நின்ற எங்கள் திலக முனிவர்கோன்
> சீரடிக் கமலத் தினை வாழ்த்துவேன்
> சிந்தை தூய்மை பெறுகெனச் சிந்தித்தே,

எனப் பாடுகிறார். இத்தகைய பெரியாரைத் தலைவராகக் கொண்டேன் நான்.

வள்:— மகிழ்ச்சி; தக்க தலைவர்கள் இருந்தால் தான் நாடு நலம் பெறும்.

நிலைமக்கள் சால உடைத்தெனினும் தானை
தலைமக்கள் இல்வழி இல்.

வ. உ. சி:— சாமி சகஜானந்தரின் தொடர்பால் என் தமிழார்வம் வளர்ந்தது. தங்களின் திருக்குறளை நாங்கள் படித்து உவகைக் கடலில் திளைப்போம். ஒப்புயர்வற்ற சுப்பிரமணிய சிவாவின் நட்பினிலே என் மொழிப்பற்றும் நாட்டுப்பற்றும் வளர்ந்தன. சுழன்றடிக்கும் சூறாவளியை, கூவி எரியும் கொடும் நெருப்பை அவர் பேச்சுக்கு ஒப்பிடலாம். நான் சிறையில் இருந்து வெளிவந்தேன். ஏன் என்று கேட்க ஆள் இல்லை. அப்பொழுது 'சிவா' தான் எனக்கு உதவிபல புரிந்தார். எனக்கு வந்த கெடு தியும் கூட நண்பரை அளக்கும் கோலாயிற்று.

வள்:— நண்பர் குணத்துக்கு நல்லதோர் குறள் அறிக:

கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி யளப்பதோர் கோல்.

வ. உ. சி:— இத்தகைய நல்லோரைப்பற்றிக் கூறி வந்த நான் நாட்டை ஆளும் பெயரிலே நடமாடிய நய வஞ்சக நரிகளைப் பற்றியும் சுருங்கச் சொல்கிறேன். பேய்க்குணம் படைத்து, நீதி வழங்கும் ஆசனத்திலே அமர்ந்திருந்த 'பின்ஹே' ஒருவன். இவன்தான் அந்த மான் தீவிலே நான் 40 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என ஆணை பிறப்பித்தவன். அது பின்னர் 6 ஆண்டுக் கடுந்தண்டனையாக மாறி

பது. மற்றொருவன், என் தாய்நாட்டுப் பற்றைத் தவிர்க்கமுடியாத குற்றமெனக் கூறிய கலெக்டர் 'விஞ்சு' என்பவன். இன்னொருவன் மக்களை மாக்களாகக் கருதியவன் 'ஆஷ்' என்ற பெயருடையவன். இவன், நாட்டு உணர்ச்சியால் உள்ளம் குமுறிய இளைஞன் ஒருவனால் சுட்டுக் கொல்லப்பட்டான்.

வள் :— தீயோரின் போக்குரைத்த செஞ்சொற் தமிழ!

தீவினை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயா தடியுறைந் தற்று.

வ. உ. சி :— தமிழ் முனிவரே! வ. உ. சிதம்பரமாக இருந்த நான் கப்பலோட்டிய தமிழனாக ஆன விந்தையை இனிமேல்தான் சொல்லப் போகிறேன். பொறுத்தருள்க. உச்சிக்கிழான் கோட்டம், ஊர்க் கோட்டம், வேற் கோட்டம், வச்சிரக் கோட்டம், புறம்பணையான் வாழ் கோட்டம், நிக்கந்தக் கோட்டம், நிலாக் கோட்டம் முதலிய கோட்டங்களைப் பெற்றுச் சோழநாட்டின் தலைநகராக விளங்கிய காவிரிப்பூம் பட்டினத்துக் கடற்கரையிலே நின்றுகொண்டிருந்தான் சாதுவன். "செல்வம் அனைத்தையும் இழந்து விட்டோம்; அதுகூடப் பரவாயில்லை. 'செல்வம் இல்லாத நீ இனி இங்கு வர வேண்டாம்' என்றல்லவா அந்தப் பொதுமகள் சொல்லி விட்டாள்; அவள் கூறிய சொற்கள் அல்லவா என்னை மிகவும் துன்புறுத்துகின்றன" என வருந்தியவனாய்க் கடல் வாணிகத்துக்காகக் கப்பலில் செல்லும் வணிகருடன் வங்கம் ஏறிச் சென்றான். அந்தோ! அவன் சென்ற கப்பல் பெருங்காற்றால் தாக்கப்பட்டுக் கவிழ்க்

த்து. சாதுவனை அலை தள்ள, ஒடிமரம் பற்றி ஒரு மலைப்பக்கத்தை அடைந்தான். அப்பகுதியில் இருந்தவர்கள் நாகர்கள். நாகர் மொழி நன்கு தெரிந்தவன் சாதுவன் என்பதற்காக அங்கு வாழ்ந்த மூரடர்கள் பாதுகாத்துப் போற்றி, அவன் ஊருக்குச் செல்கிறேன் என்றதும் வேண்டிய பொருளையும் கொடுத்து அனுப்பினர். — மணிமேகலை நூலில் கூறிய சாதுவன் காட்சியை என் வாழ்விலே பொருத்திப் பார்த்தேன்.

தூத்துக்குடிக் கடற்கரையிலே நின்றேன் — என் தாய்நாட்டு மக்கள் பொருளின்றி வாடுவதைக் கண்டேன். பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைந்தால் ஒழிய நாட்டு மக்களுக்கு வாழ்வில்லை என்பதை உணர்ந்து, பண்டுதொட்டுத் தமிழர்கள் செய்துவரும் கடல் வாணிபத்தைத் தொடங்க ஆரம்பித்துக் கடல் வணிகக் கூட்டத்தாருடன் சேர்ந்தேன். ஆங்கிலேயர்கள் என்னும் பெரும் சூறாவளிக் காற்றினால் எனது கப்பல் தாக்கப்பட்டது. ஆனால் இனிமேல்தான் முக்கிய நிகழ்ச்சி இருக்கிறது. மொழியறிந்தவன் என்பதற்காகச் சாதுவன் மூரடர்களால் போற்றி வளர்க்கப்பட்டான்; ஆனால் நானோ தாய்மொழி யாளர்களாலேயே — இனத்தவராலேயே — நாகரிகம் கொண்டவர்கள் என்று கருதுபவர்களாலேயே தாக்கப்பட்டேன். சிரமப்பட்டு 'சுதேசிக் கப்பல் கம்பெனியை' ஆரம்பித்தேன். எல்லோரும் தரையில் நின்று சண்டை செய்த போது நான் மட்டும் தண்ணீரிலே நின்று வெள்ளையனோடு போர் செய்தேன். எனது ஆற்றல் பாராட்டப் பட்டதா? இல்லை. நான் சிறையில்

இருந்து செக்கிழுத்துக் கல்லுடைத்துத் துன்பப்பட்ட போது, சுதேசிக் கப்பல் கம்பெனிக்காரர், 'கம்பெனிக்குக் கேடு உன்னால்தான் வந்தது; கம்பெனி நஷ்டப்பட்ட தொகையை நீதான் தரவேண்டும்' எனத் தெரிவித்திருந்தார்கள். இவர்களை விடத் தீவிலே வாழ்ந்த நாகர்கள் எவ்வளவு நல்லவர்கள்!

வள் :— நாகர் மனத்துள்ள நற்பற்றைச் செந்தமிழாம் பாகோடு சேர்த்துரைத்த பாவலரே! ஆயுதம் தாங்கி, நம்மை அழிக்கவரும் பகைவர்களுக்குக் கூட அஞ்சவேண்டாம். நம்முடன் இருந்தே நம்முடன் நயந்து பேசி, நமக்கு உதவி செய்பவர்கள் போல நடித்து, சமயம் வரும்பொழுது நம்மையே கொல்லப் பார்கரும் கேள் போல் பகைவர்க்குத்தான் மிகமிக அஞ்சவேண்டும். கண்ணனூர், கோயமுத்தூர் சிறைகளிலே ஆங்கிலேயர்கள் உங்கட்குச் செய்த கொடுமையைவிட ஆபத்து நேரத்தில் அகப்பட்டதைச் சுருட்டிக் கொள்ள நினைத்த சுதேசிக் கப்பல் கம்பெனிப் பங்குதாரர்கள் மிகவும் கொடியவர்கள் அல்லவா?

> வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
> கேள்போல் பகைவர் தொடர்பு.

வ. உ. சி:— செந்தளிர்க் கற்பகத்தின் தெய்வத் திருமலர்போல் பைந்தமிழ்க்கோர் குறள் தந்த பாவரசே! வக்கீல் தொழிலை வளம்பட நடத்தினேன்; சுதேசிக கப்பல் கம்பெனியை உண்டாக்கினேன்; பிறதேசப் பொருள்களைத் தடுக்க வேண்டும் எனக் கிளர்ச்சி செய்தேன்; தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டு நின்ற' என்

உரிமைத் திருநாடு விடுதலைபெற வேண்டும் என உழைத்தேன். சிறைவாசம் எனக்குப் பரிசாகக் கிடைத்தது. சிறையிலே கிடந்தபோதும் செந்தமிழை மறக்கவில்லை நான். உங்களைப் போன்று உலகம் பாராட்டும் குறள் நூலைச் செய்ய என்னால் இயலுமா? "மனம்போல வாழ்வு" "வலிமைக்கு மார்க்கம்" முதலிய நூல்களை இயற்றினேன். கவிதைகள் பல பாடினேன். உரை நூல்கள் பலவற்றைப் பதிப்பித்துள்ளேன்.

"பத்தும் புதிய கலைகள் பஞ்ச
பூதச் செயல்களின் நட்பங்கள் காட்டி
மேத்த வளருது மேற்கே அந்த
மேன்மைக் கலைகள்"

தமிழுக்குத் தேவை என விரும்பினேன் நான்; என்னால் இயன்ற மொழித் தொண்டைச் செய்தேன். 1936-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மண்ணுலக வாழ்வை நீத்து விண்ணுலகம் புகுந்தேன்.

வள் :— தாய்ப்பால் தரும் ஆற்றலைவிடத் தாய்மொழி தரும் ஆற்றல் அளவிடற்கரியது என்பதைத் தரணிக்குக் காட்டி வந்த தகோய்! '1936-ஆம் ஆண்டில் தவப்புதல்வனை இழந்து விட்டேனே' எனத், தமிழ்த்தாய் தவித்தாள்; 'மண்ணுலக மாணிக்கம் மறைந்ததே' என மக்கள் துன்பக் கடலுள் ஆழ்ந்தார்கள்; 'ஈடு இணையற்ற தளபதியை இழந்தோமே' என இளைஞர்கள் ஏங்கினர். மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்லாமல், திறமான ஆற்றலைப் பிறதேசத்தவர் உணரக் கப்பலோட்டிய கன்னித்

தமிழ் வீரராகிய உங்களது வரலாறு தமிழர்க்கு ஒரு ஒளி விளக்காகும்.

வ. உ. சி:— தமிழ் வானிலே ஒளி வீசும் கவியரசே! பிறர்பிறர் சீரெல்லாம் போற்றிச் சிறுமை புறங்காக்கும் தங்கள் உள்ளப் பண்பை மக்கள் உள்ளம் கொள்ளும் நன்னாள் எந்நாளோ?

வள்:— விரைவில் வரும் உள்ளத்தில் உண்மை ஒளி மிகக்கொண்டீர்! தெள்ளூற்ற தமிழமுதின் தீஞ்சுவை கண்டீர்! இந்த அமரர் சிறப்புக்கண்டீர்-வாழ்க!

வ. உ. சி:— வாழ்த்துக்கு நன்றி. வணக்கம்.

வள்:— வணக்கம்.

CONNEMARA PUBLIC LIBRARY
4 - JUN 1956
MADRAS